# வைப்பகம்

2022 யூலை - செத்தெம்பர் மலர் 7 இதழ் 07 - 09

அறிவுத் தேடலின் மையம்

02 ஒன்றிணைந்த மேற்பார்வைக் கோட்பாடுகளும் இலங்கையின் பின்னணியில் சாத்தியமான பிரயோகங்களும்

06 தேசிய கணக்குகள் மதிப்பீடுகளின் அடிப்படை ஆண்டை 2015ஆம் ஆண்டாக மாற்றியமைத்தல்

12 வெளிநாட்டிலிருந்து பணவனுப்பும் செலவைக் குறைத்து நிதியியல் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் பணவனுப்பல் முறைகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம்

18 இரு நாணயங்களுக்கிடையிலான செலாவணி வீதங்களை எது நிர்ணயிக்கின்றது?

ISSN 2513-3012

இக்கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் எழுத்தாளர்களின் கருத்துக்களேயன்றி அவை இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை

இலங்கை மத்திய வங்கி
தொடர்பூட்டல் திணைக்களம்

# ஒன்றிணைந்த மேற்பார்வைக் கோட்பாடுகளும் இலங்கையின் பின்னணியில் சாத்தியமான பிரயோகங்களும்

டி. மஞ்சுளா அபேயசேகரா
பிரதிப் பணிப்பாளர்
வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களம்

### அறிமுகம்

வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழு (Basel Committee) என்பது வங்கிகளை முன்மதிமிக்கவாறு ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான முதன்மையாக உலகளாவிய தரநியமனத்தினை நிர்ணயிக்கும் குழுவாவதுடன் வங்கித்தொழில் மேற்பார்வைக் கருமங்களில் கிரமமான ஒத்துழைப்பிற்கான மன்றத்தினை வழங்குகின்றது. வங்கித்தொழில் மேற்பார்வைக்கான பாசல் குழுவானது 1974இல் நிறுவப்பட்டதாகும். பாசலில் பன்னாட்டுத் தீர்ப்பனவிற்கான வங்கியில் தலைமை அலுவலகத்தைக் கொண்ட குழுவானது உலகம் முழுவதும் வங்கித்தொழில் மேற்பார்வைத் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் நிதியியல் உறுதிப்பாட்டினை அதிகரிப்பதற்கும் வங்கித்தொழில் கருமங்கள் மீது அதன் உறுப்பு நாடுகளுக்கிடையில் கிரமமான மன்றமொன்றாகப் பணியாற்றுவதற்கும் நிறுவப்பட்டதாகும்.

வங்கித்தொழில் மேற்பார்வைக்கான பாசல் குழு குறிப்பிடுவதற்கிணங்க, வங்கித்தொழில் மேற்பார்வையில் முக்கிய நோக்காகக் காணப்படுவது ஒன்றுதிரண்ட அடிப்படையில் வங்கித்தொழில் குழுக்களை மேற்பார்வை செய்து, உலகம் முழுவதும் வங்கித்தொழில் குழுமங்களினால் கொண்டுநடாத்தப்படுகின்ற அனைத்து வியாபார நோக்குகளையும் போதுமானளவில் கண்காணிப்பதை இயலச்செய்வதும் பொருத்தமானவாறு முன்மதியுடைய தரநியமங்களைப் பிரயோகிப்பதுமாகும். ஒரு வங்கித்தொழில் குழுமமானது உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள உரித்தாகக் கொள்கின்ற கம்பனி, வங்கி/ வங்கிகள் அத்துடன் அதன் கிளைகள், துணை நிறுவனங்கள், இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டுமுயற்சிகள், கிளைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இக்கம்பனிகள் நிதியியல் துறை சார்ந்தவையாக அல்லது சாராதவையாக இருக்கலாம். பெரும்பாலும், உலகம் முழுவதும், விசேடமாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் சிக்கலான கட்டமைப்புக்களுடன் கூடிய நிதியியல் பல்கூட்டு நிறுவனங்கள் தோற்றம்பெற்று, ஒரு நிறுவனத்திலிருந்து தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகள் காரணமாக வங்கித்தொழில் குழுமங்களுக்கு ஏற்படுகின்ற இடர்நேர்வுகளைப் புரிந்துகொள்வதற்கு ஒன்றுதிரண்ட மேற்பார்வை போன்ற கருவிகளைப் பயன்படுத்துவதற்கு உலகம் முழுவதுமுள்ள வங்கித்தொழில் மேற்பார்வையாளர்களை தேவைப்படுத்துகின்றன.

ஒன்றுதிரண்ட மேற்பார்வை என்பது அத்தகைய இடர்நேர்வுகள் வங்கிகளுக்கு உரியனவோ அல்லது இணைந்த நிறுவனங்களைச் சார்ந்தனவோ என்பதனைப் பொருட்படுத்தாது குழுமத்திலுள்ள வங்கியொன்றினை அல்லது வேறு நிறுவனங்களை பாதிக்கக்கூடிய அனைத்து இடர்நேர்வுகளையும் பரிசீலனையிற் கொள்கின்ற ஒட்டுமொத்த வங்கித்தொழில் குழுமமொன்றினது வலிமையினை மதிப்பிடுவதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய அணுகுமுறையொன்றாகவும் வரைவிலக்கணம் செய்யப்படலாம். மேலே குறிப்பிடப்பட்ட குழும இடர்நேர்வுகள், வங்கியின் பரந்தளவான குழுமத்தினை உருவாக்குகின்ற தரப்பினர்களுடன் அதன் நிதியியல் அல்லது நிதி சாரா உறவுகளிலிருந்து தோற்றம் பெறுகின்றன.

### குழுமக் கட்டமைப்புக்கள்

பாரிய கம்பனிக் குழுமங்களின் சிக்கலான கட்டமைப்புக்கள் அவற்றின் ஒன்று மற்றொன்றிற்கிடையிலான தொடர்புகளைப் புரிந்துகொள்வதை கடினமாக்குகின்றன இதுவே, அவற்றை மேற்பார்வை செய்வதையும் கடினமாக்குகின்றது. குழுமம் முழுவதுமான மேற்பார்வையானது அது பல்துறை சார்ந்த தேர்ச்சிகள், பிரத்தியேகமான மூலவளங்கள் மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய இடர்நேர்வு மதிப்பீட்டுச் செயன்முறை போன்றவற்றை வேண்டி நிற்பதனால் அவ்வாறான மேற்பார்வை கடினமானதாகக் காணப்படுகின்றது. அனைத்துக்கும் மேலாக, இது அரசியல் அழுத்தத்திற்கும் இடைத்தலையீடுகளுக்கும் ஈடுகொடுக்கத்தக்க வலிமையுடன் கூடிய சுயாதீன மேற்பார்வையாளரை வேண்டுகின்றது. குழுமம் முழுவதுமான மேற்பார்வையினை நடைமுறைப்படுத்தலானது வங்கி ஒருங்கிணைக்கப்பட்டுள்ள கூட்டாண்மைக் குழுமத்தின் கட்டமைப்பினை புரிந்துகொள்வதை வேண்டிநிற்கின்றது. வங்கித்தொழில் நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகின்ற உண்மையான ஆட்களின் அடையாளத்தினை அது இறுதியாக வெளிக்காட்டாவிடில், மேற்பார்வையாளர்கள் சிக்கல்வாய்ந்த கட்டமைப்புக்களை அனுமதிக்கக்கூடாது. குழும மதிப்பீட்டினை நடாத்துவதற்கும் குழுமமொன்றின் இடர்நேர்வு அளவுசார் பகுப்பாய்வு பற்றித் தீர்மானமொன்றினை

எய்துவதற்கும் பலவகையான அணுகுமுறைகள் காணப்படுகின்றன. கீழிருந்து-மேல் அணுகுமுறையானது அநேகமாக மிகவும் பொதுவானதும் குறைந்தளவு முன்னேற்றமடைந்ததுமாகும். இவ்வணுகுமுறையில், ஒவ்வொரு துறைசார் மேற்பார்வையாளரும் அவர்கள் பொறுப்பு வகிக்கின்ற துறைகளுக்கான நிறுவனங்களிலுள்ள இடர்நேர்வுகளை மதிப்பிடுவதுடன் ஒவ்வொரு துறைக்குமான மதிப்பீடு மிக அநேகமாக வங்கித்தொழில் ஒழுங்குமுறைப்படுத்துநரான குழுமத்திற்கான தலைவரினால் அல்லது ஒருங்கிணைக்கின்ற மேற்பார்வையாளரினால் ஒன்றிணைக்கப்படுகிறது. இவ்வணுமுறையானது, இடர்நேர்வு ஒழுங்குமுறைப்படுத்தல்களின் குவிதல் மட்டத்திலிருந்து மேற்பார்வையாளர் முறைகள் வரை பல்வேறு வகையான பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றது. மேலிருந்து கீழ் அணுகுமுறை அநேகமாக மிகவும் முன்னேற்றகரமானதாக இருக்கின்றபோதிலும் இது வளர்ந்து வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் மத்தியில் பிரபல்யம் குறைந்தவையாகும். இவ்வணுகுமுறையில் தாய்க்கம்பனி அதேபோன்று துணைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகளில் நடப்பது யாது என்பது பற்றிய ஒட்டுமொத்த நோக்கொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு குழும மேற்பார்வையாளர் உச்சமட்ட தாய்க் குழும நோக்கிலிருந்து இடர்நேர்வு நடவடிக்கைகள் மற்றும் மத்திய கட்டுப்பாட்டுத் தொழிற்பாடுகளை மதிப்பிடுகின்றார். துறைசார் அத்துடன் இடர்நேர்வு விசேட நிபுணர்கள் மூலம் மேலும் தளத்திலான மதிப்பீடுகளை வேண்டுகின்ற தொழிற்பிரிவுகள் மற்றும் அலகுகளை நிர்ணயிப்பதற்கு பெறுபேறுகள் பயன்படுத்தப்படுகின்றன.

### ஒன்றுதிரட்டுவதற்கான காரணங்கள்

நிறுவனங்களைத் ஒன்றுதிரட்டுவதற்கு சாத்தியமான பல காரணங்கள் காணப்படலாம். நிதியியல் புத்தாக்கம், போட்டித்தன்மை, தொழிற்துறையில் ஒன்றுசேர்த்தல்கள், ஒழுங்குமுறைப்படுத்தல் ஈடுபாட்டினைத் தவிர்த்தல் போன்றன அவற்றில் சிலவாகும். மேலும், ஒன்றுதிரட்டப்பட்ட நிறுவனங்கள் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் குறிக்கோள்களும் வேறுபட்டவை. உதாரணமாக, வங்கிகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்துநரின் குறிக்கோளானது நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்ததன்மை/ வைப்பாளரின் பாதுகாப்பு என்பனவாகும். பிணையங்கள் நிறுவனங்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்துநரின் குறிக்கோளானது சந்தை வெளிப்படுத்தல்களுடன் அணிசேர்ந்திருத்தல், போதுமான அறிக்கையிடல் மற்றும் முதலீட்டாளர்களின் பாதுகாப்பு என்பனவாகும்.

ஆகையினால், சில சந்தர்ப்பங்களில் வேறுபட்ட ஒழுங்குமுறைப்படுத்துநர்களின் மேற்பார்வைக்கு தாம் உட்படுத்தப்படுகின்ற வகையில் வேறுபட்ட தொழில்துறைகளிலுள்ள கம்பனிகளை ஒன்றுதிரட்டுவதனூடாக குழுமத்தில் கட்டுப்படுத்துகின்ற நலனைக் கொண்டுள்ள ஆட்கள் ஒழுங்குமுறைப்படுத்துநர்களைத் தவறாக வழிநடாத்துவதற்கு எத்தனிக்கின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒன்றுதிரட்டிய நிறுவனங்களாக அத்தகைய நிறுவனங்களை மேற்பார்வை செய்வது மிகவும் கடினமாகும்.

### ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வையிலுள்ள முக்கிய படிமுறைகள்

ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வைக்கென வேறுபட்ட ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் சிறிதளவு வேறுபட்ட அணுகுமுறைகளைப் பின்பற்றலாம். எவ்வாறாயினும், பல வங்கித்தொழில் குழுமங்களை மேற்பார்வை செய்கின்ற ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வ் மூலம் பின்பற்றப்படும் அணுகுமுறையானது உலகில் சிறந்த நடைமுறையாகக் கருதப்படுகின்றது. முதலாவது படிமுறை குழுமம் பற்றிய நிறுவனசார் பொதுநோக்கொன்றைத் தயாரிப்பதாகும். இது, தொழில் உபாயம், மூலதனக் கட்டமைப்பு உள்ளடங்கலாக நிதியியல் முகக்குறிப்பு, நிதியிடல் மூலங்கள் மற்றும் கடன் தரப்படுத்தல்கள் என்பனவற்றை உள்ளடக்கலாம். நிறுவனசார் பொதுநோக்கானது பணிப்பாளர் சபை தொடர்பான தகவல்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணி உள்ளடங்கலாக நிறுவன ஆளுகை அத்துடன் அவர்களின் வெளிநாட்டுத் தொழிற்பாடுகள் பற்றிய விபரங்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது. அடுத்த படிமுறையானது கொடுகடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாட்டு மற்றும் சட்ட/ இணங்குவித்தல் இடர்நேர்வுகள் உள்ளடங்கலாக ஒன்றுதிரட்டப்பட்ட இடர்நேர்வு மதிப்பீடொன்றினைத் தயாரிப்பதாகும். இத்தகவல்களின் அடிப்படையில் வங்கியை உரிமையாகக் கொண்ட கம்பனிக்கும் அதன் முக்கிய வெளிநாட்டுத் தொழிற்பாடுகளுக்குமென மேற்பார்வைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு தளத்திலான மீளாய்வுகள் கொண்டுநடாத்தப்படுகின்றன. உரித்துக் கம்பனிக் கட்டமைப்புக்களானவை வேறுபட்ட ஒழுங்குமுறைப்படுத்துநர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்ற சட்ட ரீதியான நிறுவனங்களை உள்ளடக்கலாம். எடுத்துக்காட்டாக, ஐக்கிய அமெரிக்காவில் பெடரல் றிசேர்வ் அரச உறுப்பு வங்கிகளை மேற்பார்வை செய்கின்ற அதேவேளை நாணயச் செலவுக் கட்டுப்பாட்டாளர் அலுவலகம் தேசிய வங்கிகளை மேற்பார்வை செய்வதுடன் பிணையங்கள் வணிகர்களை பிணையங்கள் ஆணைக்குழு மேற்பார்வை செய்கின்றது. அறிக்கைகள், தரப்படுத்தல் மதிப்பீடுகள் அத்துடன் தொடர்ச்சியான மேற்பார்வைகளிலிருந்து கிடைக்கின்ற தகவல்கள் என்பவற்றை பகிர்ந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் மற்றும் வினைத்திறன்களை அடைந்து கொள்வதற்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் சுமையினைக் குறைப்பதற்கும் மீளாய்வு ஒருங்கிணைப்பு மற்றும் மூலவளங்களின் உச்சமட்ட பயன்பாடு என்பன பொறுப்பேற்கப்பட வேண்டும்.

மேலும், சில வங்கித்தொழில் குழுமங்கள், வெளிநாடுகளில் உரித்துக் கம்பனிகளை அல்லது வெளிநாட்டு துணை நிறுவனங்களைக் கொண்டிருக்கலாம் என்பதனால் திரட்டப்பட்ட மேற்பார்வையில் உள்நாட்டில் ஏற்பாடு செய்யப்படும் மேற்பார்வை தொடர்புகள் மிகவும் முக்கியமானவையாகவும் விளங்குகின்றன. உள்நாட்டில் ஏற்பாடு செய்யப்படும் தொடர்புகள் மீதான பாசல் மையக் கோட்பாடு 13, மேற்பார்வை மீதான இத்தேவைப்படுத்தல்களை உள்ளடக்குகின்றது. முக்கிய இடர்நேர்வுகள், இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள், தமது நியாயாதிக்கத்தின் கீழ் உள்நாட்டு மேற்பார்வையாளர்களின் நிறுவனங்கள் பற்றிய மதிப்பீடுகள் என்பன உள்ளடங்கலாக உரிய கால அடிப்படையில் உள்நாட்டு மேற்பார்வையாளர் பற்றிய பொருத்தமான தகவல்களைப் ஏற்பாடுசெய்யும் மேற்பார்வையாளர் பகிர்ந்துகொள்ள வேண்டும். மேலும், ஏற்பாடுசெய்யும் மேற்பார்வையாளர், உள்நாட்டு மேற்பார்வையாளருடன் பொதுவாக ஆர்வமுள்ள துறைகளில் மேற்பார்வை நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துத் திட்டமிட வேண்டும் அல்லது கூட்டாக இணைந்த பணியினை மேற்கொள்ள வேண்டும்.

**வெளிநாட்டுத் வங்கித்தொழில் குழுமங்களுக்கான ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வை**

மேற்குறிப்பிட்டதைப் போன்றே, வெளிநாட்டு வங்கித்தொழில் குழுமங்களுக்கும் முதலாவது படிமுறையானது குழுமம் பற்றி நிறுவனசார் பொதுநோக்கொன்றினைத் தயாரிப்பதை ஈடுபடுத்துகின்றது.

பின்னர், தொடர்புடைய நாட்டின் மேற்பார்வை மற்றும் நிதியியல் முறைமை பற்றிய புரிதலினைப் பெற்றுக்கொள்வது ஒழுங்குமுறைப்படுத்துநர்களுக்கு அத்தியாவசியமாகும்.

அடுத்து, உள்நாட்டு மேற்பார்வையாளர்களிடமிருந்து உள்ளூரிலேயே வங்கியின் முக்கிய இடர்நேர்வுகள் மற்றும் நிதியியல் செயலாற்றம் போன்ற தகவல்கள் மேற்பார்வைக் கல்லூரிகள், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் கூட்டங்களூடாகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

**வங்கித்தொழில் குழுமங்களின் ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வைக்காக ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வினால் பயன்படுத்தப்படும் தரப்படுத்தல்கள்**

இடர்நேர்வு முகாமைத்துவம், தொழிற்பாடுகள், இணங்குவித்தல், சொத்துத் தரம் (ROCA) என்பனவற்றைக் கருத்திற்கொள்கின்றது. இத்தரப்படுத்தலானது தனிப்பட்ட வெளிநாட்டு வங்கிக் கிளைகளுக்கும் ஒவ்வொரு வெளிநாட்டு வங்கிக் கிளையினது முகவராண்மைகளுக்கும் தயாரிக்கப்படுகின்றது. உலகம் முழுவதிலும் பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்ற மூலதனம், சொத்துத் தரம், முகாமைத்துவம், உழைப்பு மற்றும் திரவத்தன்மை (CAMEL) தரப்படுத்தலானது வங்கித்தொழில் குழுமத்தின் தொழிற்பாடுகளைத் தரப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. அதன் பின்னர், வங்கி உரித்துக் கம்பனியினை மதிப்பிடுவதற்கு தரப்படுத்தலொன்று (LFI) பயன்படுத்தப்படுகின்றது. இத்தரப்படுத்தலானது பாரிய நிதியியல் நிறுவனத் தரப்படுத்தல் என அறியப்படுகின்றது. இது, ஐக்கிய அமெரிக்க டொலர் 50 பில்லியன் அல்லது அதற்கும் மேற்பட்ட மொத்தச் சொத்துக்களுடன் கூடிய (அதன் துணை நிறுவனங்களின் சொத்துக்கள் நீங்கலாக) பாரிய இடையீட்டு உரித்துக் கம்பனிக்காகப் (IHC) பயன்படுத்தப்படுகின்றது. இத்தரப்படுத்தலை மதிப்பிடுவதற்கு மூலதனம், திரவத்தன்மை, ஆளுகை போன்ற மூலப்பிரமாணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. உரித்துக் கம்பனிகளாக இருக்கின்ற சிறிய, சிக்கலற்ற நிறுவனங்களுக்காக இடர்நேர்வு, நிதியியல் நிலைமை மற்றும் தாக்கம் (RFI) என அழைக்கப்படுகின்ற தரப்படுத்தல் உரித்துக் கம்பனியினைத் தரப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

இறுதியாக, இணைந்த ஐக்கிய அமெரிக்கத் தொழிற்பாடுகள் (CUSO) என குறுக்கம் செய்யப்பட்ட அனைத்து ஐக்கிய அமெரிக்கத் தொழிற்பாடுகளுக்குமான ஒன்றிணைந்த தரப்படுத்தலானது அனைத்து ஐக்கிய அமெரிக்க வங்கித்தொழில் மற்றும் வங்கித்தொழில் சாராத் தொழிற்பாடுகளுக்கும் தயாரிக்கப்படுகின்றது.

தரப்படுத்தலைத் தயாரித்தலானது இடர்நேர்வுகள், இடர்நேர்வு முகாமைத்துவக் கருவிகள், நிதியியல் நிலைமைகள் மற்றும் வங்கித்தொழில் குழுமங்கள் மீதான வங்கியல்லா நிறுவனங்களின் தாக்கம் என்பனவற்றைக் கருத்திற்கொள்கின்றது.

**நிதியியல் குழுமங்களுக்கான இடர்நேர்வு ஒருங்கிணைப்பு**

மேலே எடுத்துக்காட்டப்பட்டவாறு, ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வையின் மிக முக்கியமான நோக்கு தனிப்பட்ட வங்கிகளுக்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்குமான இடர்நேர்வை மதிப்பிடுவதும் பொதுவான இடர்நேர்வுக் குறிகாட்டியொன்றாக அவற்றை ஒன்றிணைப்பதுமாகும். இதனை அடைந்துகொள்வதற்கு, ஒன்றுதிரண்ட இடர்நேர்வு அமைவுருவொன்று தயாரிக்கப்பட வேண்டும். உட்பொதிந்துள்ள இடர்நேர்வுகளையும் ஒவ்வொரு இடர்நேர்வு வகைக்குமென இடர்நேர்வுத் தணிப்பு காரணிகளையும் இடர்நேர்வு அமைவுரு தொகுக்கின்றது. பெறுபேற்றினை தருவதற்கு ஒவ்வொரு இடர்நேர்வு வகைக்குமென உட்பொதிந்த இடர்நேர்வும் இடர்நேர்வுத் தணிப்பு காரணிகளும் அட்டவணைப்படுத்தப்பட வேண்டும் இது, தேறிய இடர்நேர்வாகும்.

பொதுவான இடர்நேர்வு வகைளின் பிரிவுகளாக கொடுகடன் இடர்நேர்வு, தொழிற்பாட்டு இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு இணங்குவித்தல்/ ஒழுங்குமுறைப்படுத்தல் இடர்நேர்வு என்பன காணப்படுவதுடன் உபாய இடர்நேர்வு, சட்ட இடர்நேர்வு, நற்பெயர்சார் இடர்நேர்வு

மற்றும் மாதிரி இடர்நேர்வு என்பன குறைந்தளவான மட்டத்தில் காணப்படுகின்றன. இறுதி 'தேறிய' இடர்நேர்வு பெறுபேற்றினைத் தரக்கூடியவாறு உட்பொதிந்துள்ள இடர்நேர்வும் இடர்நேர்வுத் தணிப்பு காரணிகளும் தரப்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு இடர்நேர்வு வகையினையும் மதிப்பிடுவதற்கு வேறுபட்ட மதிப்பீட்டு மூலப்பிரமாணம் பயன்படுத்தப்படலாம். உதாரணமாக இழப்பு தரவு மற்றும் சூழ்நிலைப் பகுப்பாய்வு என்பன தொழிற்பாட்டு இடர்நேர்வைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இடர்நேர்விலுள்ள பெறுமதி, சந்தை விலை குறிக்கப்பட்ட இழப்புக்கள் போன்ற குறிகாட்டிகள் சந்தை இடர்நேர்வுக்காக பயன்படுத்தப்படுகின்றன. கொடுகடன் மற்றும் சந்தை இடர்நேர்வுகள் போன்ற சில இடர்நேர்வுகள் பின்னிப்பிணைந்துள்ளமையினால் இது நேரடியான செயற்பாடொன்றாக அமையாது. அதன் பின்னர், இவ்வாறான 'தேறிய' இடர்நேர்வானது மேலே குறிப்பிட்ட ROCA, RFI போன்ற வேறுபட்ட தரப்படுத்தல்களைக் கணிப்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். திருப்தியளிப்பதை விடக் குறைவானதாகக் கருதப்படுகின்ற குறிப்பாக, ஒப்பீட்டளவில் உயர்வான உட்பொதிந்த இடர்நேர்வுகளுடன் அவை தொடர்புபடுகின்றவிடத்து, மேற்பார்வை நடவடிக்கைகளும் மூலவளங்களும் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டுக் காரணிகள் என்பனவற்றை மையப்படுத்தியதாக இருக்க வேண்டும். அத்தகைய துறைகள் இடர்நேர்வு மதிப்பீடு மற்றும் மேற்பார்வைத் திட்டம் ஆகிய இரண்டிலும் கையாளப்பட வேண்டியிருக்கும். தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவமானது ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வையில் மிகவும் முக்கியமானதாகும். தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவம் என்பது இடர்நேர்வு முகாமைத்துவத்தை ஒட்டுமொத்த நிறுவனத்தினதும் அல்லது அமைப்பினது நோக்கிலிருந்து உபாய ரீதியாக நோக்குகின்ற முறையியலொன்றாகும். இது, ஒரு நிறுவனத்தின் தொழிற்பாடுகளுடன் மற்றும் குறிக்கோள்களுடன் அத்துடன்/அல்லது இழப்பிற்கு வழிவகுக்கின்ற தலையீடாக இருக்கக்கூடிய சாத்தியமான நட்டங்கள், ஆபத்துக்கள் மற்றும் அபாயத்திற்கான வேறு சாத்தியங்களை இனங்கண்டு மதிப்பிடுவதை நோக்காகக் கொள்கின்ற மேலிருந்து கீழ் நோக்கிய உபாயமொன்றாகும். தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவத்தை நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்துவதில் செலவுகளும் தொழில்நுட்பமும் சில தடைகளாகக் காணப்படுகின்றன.

மூலதனம், திரவத்தன்மை, நிதியியல் நிலைமை போன்ற வேறுபடுத்தல் கூறுகளுக்காக ஒரே மாதிரியான தரப்படுத்தல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வகையான குறிகாட்டிகளுக்காக தரப்படுத்தல் மிகவும் வலிமை, வலிமை, போதுமானது, பலயீனமானது போன்றவாறு தரப்படுத்தல்கள் அமையப்பெறலாம். இறுதியாக, அனைத்துத் தரப்படுத்தல்களும் ஒன்றுதிரட்டப்பட்ட தரப்படுத்தல்களை பெற்றுக்கொள்வதற்கு ஒன்றிணைக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு ஒன்றுதிரட்டப்பட்ட நிறுவனத்திற்குமான மேற்பார்வைத் திட்டமானது இடர்நேர்வு மதிப்பீட்டுச் செயன்முறையினை பிரதானமாகக் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும்.

**இலங்கையின் பின்னணியில் ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வை**

ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வையானது உள்நாட்டுப் பின்னணியில் ஒப்பீட்டளவில் புதிய எண்ணக்கருவாகும். இலங்கை தற்போது பாரிய நிதியியல் குழுமங்களைக் கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், துணை நிறுவனமொன்றாக ஒன்றில் வங்கியொன்றினை அல்லது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றினைக் கொண்டுள்ள அல்லது மிகவும் பொதுவாக ஒரு அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் உரித்துக் கம்பனியாக செயற்படுகின்ற வங்கியொன்றினைக் கொண்டுள்ள சில குழுமங்கள் காணப்படுகின்றன. மேலும், சில உரிமம்பெற்ற வங்கிகள் வெளிநாட்டுக் கிளைகளை நிறுவியுள்ளன. அத்துடன், சில நிதியியல் குழுமங்கள் அவற்றின் குழுமத்தில் காப்புறுதி நிறுவனங்கள், நிதி முகாமைத்துவக் கம்பனிகள் மற்றும் வேறு நிதியல்லாக் கம்பனிகளைக் கொண்டுள்ளன. இலங்கையின் ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வையுடன் தொடர்புடைய அண்மைக் கால அபிவிருத்திகளில் இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 2020 காலப்பகுதியில் ஒன்றுதிரட்டப்பட்ட அடிப்படையில் உரிமம்பெற்ற வங்கிகளின் நியதிச்சட்ட பரீட்சிப்புக்களை நடாத்துவதனைத் தொடங்கியுள்ளதுடன் ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வைக்கான நோக்கெல்லையினை நீடிக்கின்ற இரு நியதிச்சட்ட பரீட்சிப்புக்கள் 2020 காலப்பகுதியில் நிறைவுபெற்றன. இலங்கையிலுள்ள நிதியியல் குழுமங்களின் ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வை எண்ணக்கருவுடன் தொடர்புடையதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற புதிய வங்கித்தொழில் சட்டத்தினை அறிமுகப்படுத்தும் செயன்முறையினையும் இலங்கை மத்திய வங்கி முன்னெடுக்கின்றது.

**உசாத்துணைகள்:**


1. https://www.cbsl.gov.lk/en/laws/directions-circulars-guidelines-for-banks
2. Annual report of Central Bank of Sri Lanka 2020
3. Course Material - Consolidated Supervision & Risk Integration Seminar conducted by Federal Reserve in September 2019
4. https://www.bis.org/publ/bcbsc112.htm

# தேசிய கணக்குகள் மதிப்பீடுகளின் அடிப்படை ஆண்டை 2015ஆம் ஆண்டாக மாற்றியமைத்தல்[1]

திருமதி. யு. கே. ரி. திலங்கனி
மூத்த உதவிப் பணிப்பாளர்
புள்ளிவிபரத் திணைக்களம்

திரு. டி. என். லியனகே
உதவிப் பணிப்பாளர்
புள்ளிவிபரத் திணைக்களம்

## அறிமுகம்

தேசிய கணக்குகள் கட்டமைப்பானது பொருளாதாரமொன்றின் உற்பத்தி, நுகர்வு, முதலீடு, வருமான உருவாக்கம் என்பன அடங்கலாக பொருளாதார நடவடிக்கைகளின் பெறுமானங்களை மதிப்பிடுகின்றது. தேசிய கணக்குகள் முறைமை 2008இல் எடுத்துரைக்கப்பட்ட, பன்னாட்டளவில் அங்கீகரிக்கப்பட்ட பரிந்துரைகளைக் கொண்ட நியமத் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு நடப்பு மற்றும் நிலையான விலைகள் இரண்டிலும் இம்மதிப்பீடுகள் தொகுக்கப்படுகின்றன. மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (மொ.உ.உற்பத்தி) தேசிய கணக்கீட்டுச் செயன்முறையிலிருந்து பெறப்படுகின்ற முக்கிய பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகளில் ஒன்றாவதுடன் அது பொருளாதார நடவடிக்கைகளின் சேர்க்கப்பட்ட பெறுமதிக்கான மதிப்பீடுகளை வழங்குகின்றது. நடப்பு சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள், அளவு மற்றும் விலைகள் என்பனவற்றின் மாற்றங்களின் தாக்கத்தினை உள்ளடக்குகின்ற அதேவேளை நிலையான விலைகளிலான மதிப்பீடுகள் பொதுவாக அடிப்படை ஆண்டாகக் குறிப்பிடப்படுகின்ற தெரிவுசெய்யப்பட்ட குறிப்பான ஆண்டொன்றில் நிலவிய சந்தை விலைகளைப் பயன்படுத்தி பொருளாதார நடவடிக்கைகளை மதிப்பிடுகின்றது. மறுகரத்தில், நிலையான விலைகளிலான மொ.உ.உற்பத்தியானது பருமன் அளவீடொன்றாகக் கருதப்படுகின்றது. தரப்பட்ட காலப்பகுதியொன்றில் நிலையான விலையிலுள்ள மொ.உ.உற்பத்தியில் காணப்படுகின்ற மாற்றமானது ஒரு பொருளாதாரத்தின் உண்மையான வளர்ச்சியினைப் பிரதிபலிக்கின்றது. இக்கட்டுரையானது தேசிய கணக்குகள் மதிப்பீடுகளுக்கு அடிப்படை ஆண்டை மாற்றியமைப்பது ஏன் அவசியமானது மற்றும் அண்மைய அடிப்படை ஆண்டு மாற்றியமைத்தல் செயன்முறையின் போது கூட்டிணைக்கப்பட்ட உள்ளடக்கத்திற்கும் முறையியலுக்குமான முக்கிய மாற்றங்கள் பற்றி எடுத்துக்கூறுவதுடன் அடிப்படை ஆண்டு மாற்றச் செயன்முறையின் முக்கிய பெறுபேறுகளையும் எடுத்துக்காட்டுகின்றது.

## தேசிய கணக்குகள் மதிப்பீடுகளுக்கு அடிப்படை ஆண்டை மாற்றுவதன் அவசியம்

குறிப்பாக நிலையான விலைகளில் மதிப்பிடப்படுகின்ற தேசிய கணக்குகள் மதிப்பீடுகள், அடிப்படை ஆண்டில் நிலவிய பொருளாதார மற்றும் விலைக் கட்டமைப்பினால் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றன. பொருளாதாரத்தில் தொடர்ந்து வருகின்ற மாற்றங்களைப் பிரதிபலிக்கும் பொருட்டு, மிக அண்மைய ஆண்டைக் கொண்டு அடிப்படை ஆண்டைக் காலமுறையாக மாற்றீடுசெய்து அவசியமாகும். தேசிய கணக்குகள் மதிப்பீடுகள் ஏன் கிரமமான இடைவெளியில் அடிப்படை ஆண்டு மாற்றப்பட வேண்டும் என்பதற்கான முக்கிய காரணங்கள் கீழே தரப்பட்டவாறு தொகுக்கப்படலாம்.

- காலப்பகுதியொன்றிற்காக பல்வேறு உற்பத்திகளின் மற்றும் சேவைகளின் விலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் அதேபோன்று உற்பத்திக் கட்டமைப்பு நுகர்வு விதங்கள் போன்றவற்றைக் கணக்கிடுதல்.
- தொடர்ச்சியான அபிவிருத்திகள் மற்றும் புத்தாக்கங்களின் பயனாக சந்தையில் தோன்றுகின்ற பலவகையான புதிய உற்பத்திகளுக்கும் சேவைகளுக்கும் இடமளித்தல், மற்றும் காலப்போக்கில் பல உற்பத்திகளும் சேவைகளும் பயனற்றதாகுதல்.
- தற்போது காணப்படுகின்ற அடிப்படை ஆண்டின் கீழ் போதுமானளவில் உள்ளடக்கப்படாத பொருளாதார நடவடிக்கைகள் காணப்படலாம்.

---

1 இக்கட்டுரையினை எழுதுகையில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகவல்களையும் ஆக்கபூர்வமான பின்னூட்டல்களையும் இலங்கை மத்திய வங்கி/கட்டுரையாளர்கள் பாராட்டுகின்றது/ பாராட்டுகின்றனர்.

ஆகையினால் பொருளாதாரத்தின் இற்றைப்படுத்தப்பட்ட நிலைமைகளைப் பிரதிபலிக்கும் வகையில் நீண்ட காலத்தில் பொருளாதாரத்தில் இடம்பெறுகின்ற இம்மாற்றங்களைத் தேசிய கணக்குகள் மதிப்பீடுகளுக்கு கூட்டிணைக்க வேண்டியுள்ளது. கிரமமான கால இடைவெளிகளில் தேசிய கணக்குகள் மதிப்பீடுகளின் அடிப்படை ஆண்டை மாற்றியமைத்தல் தேசிய கணக்குகள் முறைமையினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பொருளாதாரமொன்றின் இற்றைப்படுத்தப்பட்ட நிலைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு குறைந்தது ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளிலும் அடிப்படை ஆண்டை இற்றைப்படுத்துவதையே சிறந்த நடைமுறைகள் எடுத்துரைக்கின்றன. அடிப்படை ஆண்டானது பொதுவாக பொருளாதார நடவடிக்கைகளில் முக்கிய இடையூறுகள்/அசாதாரண தளம்பல்களற்ற சாதாரண ஆண்டொன்றாக இருக்க வேண்டும்.

மேம்பட்ட தரவு மூலங்களைக் கொண்டு அனைத்தையுமுள்ளடக்கிய அடிப்படை ஆண்டை மாற்றியமைக்கும் செயன்முறையானது பொதுவாக மொ.உ.உற்பத்திக்கு மேல் நோக்கிய சரிப்படுத்தல்களை ஏற்படுத்தும். தேசிய கணக்குகள் மதிப்பீடுகளை 2009 இலிருந்து 2016 ஆம் ஆண்டாக அடிப்படை ஆண்டு மாற்றியமைக்கப்பட்ட கென்யாவில் அந்நாட்டின் மொ.உ.உற்பத்தியில் சிறிய அதிகரிப்பு அறிக்கையிடப்பட்டது (கென்யா தேசிய புள்ளிவிபரவியல் பணியகம், 2021). அதேபோன்று, பாகிஸ்தான், நேபாளம், தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் தேசிய கணக்குகள் மதிப்பீடுகளுக்கு அண்மையில் அடிப்படை ஆண்டை மாற்றியமைத்துள்ளன. 2021இல் நேபாளம், 2000/01 அடிப்படை ஆண்டிலிருந்து 2010/11 அடிப்படை ஆண்டிற்கு தேசிய கணக்குகள் மதிப்பீடுகளை மாற்றம்செய்தது. (நேபாள மத்திய புள்ளிவிபரங்கள் பணியகம், 2021). அடிப்படை ஆண்டை மாற்றியமைக்கின்ற இந்நடைமுறையைத் தொடர்ந்து, மொ.உ.உற்பத்தி மட்டம், அடிப்படை ஆண்டான அவ்வாண்டிலேயே (2010/11) ஏறத்தாழ 14.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அதேவேளை, பாகிஸ்தானின் மொ.உ.உற்பத்தி அடிப்படை ஆண்டை மாற்றியமைக்கும் செயன்முறையினைப் பரிசீலனையில் கொள்ளும்போது, அடிப்படை ஆண்டானது 2005/06 இலிருந்து 2015/16 ஆக இற்றைப்படுத்தப்பட்டது. இது, 2015/16 இல் மொ.உ.உற்பத்தி மட்டத்தில் ஏறத்தாழ 11.3 சதவீத அதிகரிப்பை விளைவித்தது (பாகிஸ்தான் புள்ளிவிபரங்கள் பணியகம், 2022).

தொகைமதிப்புப் புள்ளிவிபரங்கள் திணைக்களம் இலங்கையின் மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை உத்தியோகபூர்வமாகத் தொகுக்கின்ற நிறுவனமாகும். தொகைமதிப்புப் புள்ளிவிபரங்கள் திணைக்களமானது இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகளுக்கு பல தடவைகள் அடிப்படை ஆண்டை மாற்றியமைத்துள்ளதுடன் மிக அண்மைய அடிப்படை ஆண்டை மாற்றியமைத்த நடைமுறையானது முந்திய அடிப்படை ஆண்டான 2010 ஆம் ஆண்டை மாற்றீடுசெய்து அடிப்படை ஆண்டாக 2015ஆம் ஆண்டை அமைத்தமை கருதப்படுகின்றது. அடிப்படை ஆண்டை மாற்றியமைக்கும் நடைமுறையுடன் ஒருங்கிணைந்து தொகைமதிப்புப் புள்ளிவிபரங்கள் திணைக்களமானது பொருளாதார நடவடிக்கைகளின் உள்ளடக்கத்தினை விரிவுபடுத்தியதுடன் தொகுப்பு முறையியல்களையும் மேம்படுத்தியது.

## உற்பத்தி வரம்பையும் பொருளாதார நடவடிக்கைகளின் உள்ளடக்கத்தையும் விரிவுபடுத்தல்

### கொழும்பு பன்னாட்டு நிதியியல் நகரத்தை உற்பத்தி வரம்பிற்குச் சேர்த்தல்

அடிப்படை ஆண்டை மாற்றியமைக்கும் இந்நடைமுறையின் போது, பல பொருளாதார நடவடிக்கைகளின் உள்ளடக்கம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. முக்கிய உள்ளடக்க விரிவுபடுத்தல்களிலொன்று தேசிய கணக்குகள் மதிப்பீடுகளில் *கொழும்பு பன்னாட்டு நிதியியல் நகரக் கருத்திட்டம்* தொடர்பிலான காணி மீட்புப் பணியினை உட்சேர்த்தலாகும். இக்கருத்திட்டத்தின் கீழ் கொழும்பு காலி முகத்திடலை அண்மித்த கடற்பிரதேசத்தை நிரப்புவதன் மூலம் 269 ஹெக்டேயர்கள் காணிப் பரப்பு இலங்கையின் மொத்த நிலப்பரப்பிற்குச் சேர்க்கப்பட்டுள்ளது. இது பொருளாதார உற்பத்தி வரம்பினை விரிவுபடுத்தியுள்ளது. *கொழும்பு பன்னாட்டு நிதியியல் நகரத்துடன்* தொடர்புடைய காணி மீட்புப் பணிகள் 2014 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டமையினால், 2010 அடிப்படை ஆண்டின் கீழ் தேசிய கணக்குகள் மதிப்பீடுகளில் இது முழுமையாகப் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் ஒவ்வொரு ஆண்டிலும் செய்யப்பட்ட பணியின் சதவீதத்தினை கருத்திற்கொண்டு 2015 அடிப்படை ஆண்டு மதிப்பீடுகளில் தற்போது இது உள்ளடக்கப்பட்டுள்ளது. இது மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளிலும் 2014 - 2019 காலப்பகுதியின் போதான தொடர்புடைய மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதங்களிலும் கணிசமான தளம்பல்களுக்கு வழிவகுக்கின்றது.

### பொருளாதார நடவடிக்கைகளின் உள்ளடக்கத்தினை விரிவுபடுத்தல்

வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளின் அநேகமான உள்ளடக்கம் இவ் அடிப்படை மாற்றியமைக்கும் செயன்முறையின் கீழ் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. கைத்தொழில் நடவடிக்கைகளை கருத்தில் கொள்கையில் மிக முக்கிய மேம்பாடானது நிருமாண நடவடிக்கைகளில்

*கொழும்பு பன்னாட்டு நிதியியல் நகரக்* கருத்திட்டத்துடன் தொடர்புடைய காணி மீட்புப் பணிகள் உட்சேர்த்தமையாகும். வேளாண்மை நடவடிக்கை விடயத்தில் *பழங்கள், தாவர எண்ணெய், பூக்கன்று விருத்தி, வீட்டு மர உற்பத்தி மற்றும் வேளாண்மை துணையளிப்பு நடவடிக்கைகளை* உள்ளடக்க மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. காணி தயார்படுத்தல், அறுவடைக்கு முந்திய மற்றும் அறுவடைக்குப் பிந்திய நடவடிக்கைகளுக்காக வேளாண்மையாளர்களுக்கான பணிகளை வழங்குதலை உள்ளடக்குவதற்கு வேளாண்மை நடவடிக்கைகளுக்கான துணைப் பணிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், தெங்கு நடுகையிலிருந்து விளைச்சல் வரையிலான காலப்பகுதியில் பெறுமதிசேர்த்தலாகக் காணப்படுகின்ற தென்னங்கன்றுகளின் முன்னெடுக்கப்படும் பணி, எண்ணெய்சார்ந்த விதைகளை *வளர்ப்பதில் (தேங்காய், செவ்விழநீர், தாவர எண்ணெய்)* பயிர்ச்செய்கையில் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், கறவை மாடுகளின் முன்னெடுக்கப்படும் பணியாகக் குறிப்பிடப்படுகின்ற புதிதாகப் பிறந்த கன்று, கறவை மாடாக உருவாகும் வரையிலான காலப்பகுதியில் ஈட்டப்படும் சேர்க்கப்பட்ட பெறுமதியும் *மிருக உற்பத்தி நடவடிக்கைகளைத்* தொகுக்கும் போது உள்ளடக்கப்பட்டுள்ளது. பணிகள் நடவடிக்கைகள் தொடர்பில் *தகவல் தொழில்நுட்பம், களஞ்சியசாலை நடவடிக்கைகள், ஒளிபரப்பு நடவடிக்கைகள், துரித அஞ்சற் பணிகள், மத்திய வங்கியுடன் தொடர்புபட்ட நிதியியல் பணிகள் போன்றவற்றைக் கொண்ட துறைகளின் உள்ளடக்கம் மற்றும் மோட்டார் வாகனங்கள் மற்றும் உந்து ஈருளிகளைப் பழுதுபார்த்தல்* என்பனவும் இவ்வடிப்படை ஆண்டு மாற்றியமைத்தல் செய்முறையின் போது விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வுள்ளடக்க மேம்படுத்தல்கள் மூலம் உற்பத்தி அணுகுமுறையுடன் தொடர்புடைய அடிப்படை ஆண்டு மாற்றியமைக்கப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள், 2010 தொடர்களின் கீழிருந்த 48 பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பதிலாக பயிர் விருத்தி வேறாக்கம் மற்றும் வேளாண்மைக்கான துணை நடவடிக்கைகள் என்பனவற்றுடன் 49 பொருளாதார நடவடிக்கைகளின் கீழ் பரவச் செய்யப்பட்டுள்ளன.

## முறையியல் மேம்பாடுகளும் புதிய தரவு மூலங்களைப் பயன்படுத்துதலும்

### வேளாண்மை நடவடிக்கைகள்

அடிப்படை ஆண்டு மாற்றியமைக்கும் செயன்முறையின் போது வேளாண்மை நடவடிக்கைகளுக்குப் பல முறையியல் மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய, *வேளாண்மை நடவடிக்கைகள், துணைப் பணிகள், காடாக்கல் மற்றும் மரம் வெட்டுதல், பூக்கும் தாவரங்களின் மரக்கன்று விருத்தி என்பவற்றுக்கான துணைப் பணிகள்* போன்ற துறைகளின் தொகுப்பு முறையியல்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. காடாக்கல் மற்றும் மரம் வெட்டுதல் நடவடிக்கைகளின் கீழ் பிரதேச செயலகங்களிலிருந்து மர உற்பத்தி தரவுகளைச் சேகரித்தலை தொகைமதிப்புப் புள்ளிவிபரங்கள் திணைக்களம் தொடங்கியுள்ளது. மேலும், *நெல், தானியங்கள், காய்கறிகள், தேயிலை, இறப்பர், கடற்றொழில், வாசனைத்திரவியங்கள் மற்றும் மிருக உற்பத்தி* உள்ளடங்கலாக பல வேளாண்மை நடவடிக்கைகளின் உள்ளீட்டு - வெளியீட்டு விகிதங்கள், கள கணக்கெடுப்புக்களிலிருந்து சேகரிக்கப்பட்ட பிந்திய தரவுகளின் அடிப்படையில் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

### கைத்தொழில் நடவடிக்கைகள்

புதிய முறையியல் மாற்றங்களை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக பல கைத்தொழில் நடவடிக்கைகள் பலவற்றின் தொகுப்பு முறையியலும் மேம்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, தொழிற்படைக் கணக்கெடுப்புக்கள் மற்றும் பொருளாதார தொகைமதிப்பு 2013/14 என்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளைப் பயன்படுத்துவதனூடாக *தயாரித்தல் நடவடிக்கைகளின்* மதிப்பீட்டு முறையியல் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணினை மாற்றீடு செய்து நிலையான விலைகளில் *தயாரித்தல் நடவடிக்கைகளின்* மதிப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு சுருக்கியொன்றாக உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் பயன்படுத்தப்படுகின்றது. மேலும், *நிருமாண நடவடிக்கைகளுக்காக* நுகரப்பட்ட மூலப்பொருட்களின் விகிதம் நிருமாணக் கைத்தொழில் பற்றிய பிந்திய கணக்கெடுப்பு அத்துடன் வேறு பல கள ஆய்வுகள் என்பனவற்றின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை, *மின்பிறப்பாக்கம், கடத்தல் மற்றும் விநியோக நடவடிக்கைகளின்* தொகுப்பு முறையியலானது, இத்துறையின் சேர்க்கப்பட்ட பெறுமதியினை மதிப்பிடுகையில் நீர், எரிபொருள் எண்ணெய், நிலக்கரி, மரபுசாரா மீள்புதிப்பிக்கத்தக்க சக்தி மற்றும் சுயாதீன சக்தி உற்பத்தியாளர்கள் போன்றவற்றிடமிருந்து கிடைக்கப்பெறும் மொத்த மின்சக்திப் பிறப்பாக்கத்திற்கான பங்களிப்புக்களுக்காக வெவ்வேறாகக் கணக்கிடுவதன் மூலம் தரப்படுத்தப்பட்டுள்ளன.

### பணிகள் நடவடிக்கைகள்

பணிகள் நடவடிக்கைகளைக் கருத்தில் கொள்கையில் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் இயலச்செய்யப்பட்ட பணிகள் தொழில் துறை வருமானக் கணக்கெடுப்பின் பெறுபேறுகள், *தகவல் தொழில்நுட்ப செய்நிரலாக்கல் ஆலோசனையுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளின்* தொகுப்பு முறையியல்களை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டு தகவல்

தொழில்நுட்பப் பணிகளின் சேர்க்கப்பட்ட பெறுமதியில் ஒட்டுமொத்த அதிகரிப்பொன்றினை ஏற்படுத்தியுள்ளது. மேலும், *தங்குமிடப் பணிகள் மற்றும் உணவு மற்றும் குடிபானப் பணி நடவடிக்கைகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள், போக்குவரத்து, பொது நிருவாகத்துடன் தொடர்புபட்ட பொதுவான அரசாங்கம் தொடர்புபட்ட நடவடிக்கைகள், கல்வி, நலப் பணிகள்* என்பவற்றின் தொகுப்பு முறையியல்கள் அண்மைய அடிப்படை ஆண்டு மாற்றியமைத்தல் செயன்முறையின் போது மேம்படுத்தப்பட்டுள்ளன.

மேற்குறித்த மாற்றங்களுக்கு மேலதிகமாக, அண்மைய அடிப்படை ஆண்டு மாற்றியமைத்தல் செயன்முறையின் போது பின்வரும் மேம்படுத்தல்களும் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

- 2015 அடிப்படை ஆண்டின் கீழ் அடிப்படை ஆண்டு மாற்றியமைக்கப்பட்ட மதிப்பீடுகளைத் தொகுக்கையில் பல புதிய தரவு மூலங்கள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, பொருளாதார தொகைமதிப்பு 2013/14 தரவுகள் நிறுவனத் துறை வாரியான சேர்க்கப்பட்ட மதிப்பீடுகளின் பெறுமதியினை மேம்படுத்துவதற்கும் பல பொருளாதார நடவடிக்கைகளின் உள்ளீடு - வெளியீட்டு விகிதங்களை இற்றைப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், *தங்குமிடப் பணிகள், உண்மைச் சொத்து நடவடிக்கைகள், தனியார் நலப் பணிகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள், ஏற்பாட்டுப் பணிகள் மற்றும் களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகள்* போன்றன உள்ளடங்கலாக பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளின் சேர்க்கப்பட்ட பெறுமதியை மதிப்பிடுவதற்கு *கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில்* பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் நிதியியல் கூற்றுக்கள் அடிப்படை அளவுக் குறிகாட்டியொன்றாகாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- பல பொருளாதார நடவடிக்கைகளின் சேர்க்கப்பட்ட பெறுமதிகளின் நிலையான விலை பெறுமதியினைப் பெற்றுக்கொள்ளும் போது தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களமானது *"தனி சுருக்கி முறை"* பதிலாக மிகவும் பொருத்தமான *"இரட்டை சுருக்கி முறை"* பின்பற்றியுள்ளது. *"தனி சுருக்கி முறை"* இன் கீழ் வெளியீடு மற்றும் இடைநிலை நுகர்வு இரண்டும் அதே விலைச்சுட்டெண்ணைப் பயன்படுத்தி சுருக்கப்பட்டிருந்த அதேவேளை *"இரட்டை சுருக்கி முறை"* இல் வெளியீடு மற்றும் இடைநிலை நுகர்வு என்பன மிகவும் செம்மையான நிலையான விலை மதிப்பீடுகளைப் பிரதிபலிப்பதற்கு மிகப் பொருத்தமான இரு வேறுபட்ட விலைச்சுட்டெண்ணினைப் பயன்படுத்திச் சுருக்கப்படுகின்றன. இது, மிகவும் பொருத்தமானதாக இருக்குமென்று கருதப்படுகிறது.
- காலாண்டு மற்றும் வருடாந்த மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளுக்கான திருத்தக் கொள்கை அவ்வப்போதான திருத்தங்களை மட்டுப்படுத்துவதன் மூலம் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, முன்னோக்கிச் சென்று, காலாண்டு மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் தொடர்புடைய வருடாந்த மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின் வெளியீட்டுடன் மாத்திரம் திருத்தப்படுகின்ற அதேவேளை, வருடாந்த மதிப்பீடுகள் தொடர்ச்சியாக இரு ஆண்டுகளில் மாத்திரம் திருத்தப்படுகின்றன.


## 2015 அடிப்படை ஆண்டிற்கு தேசிய கணக்குகள் மதிப்பீடுகளின் அடிப்படை ஆண்டை மாற்றியமைப்பதன் முக்கிய பெறுபேறுகள்

தேசிய கணக்குகள் மதிப்பீடுகளின் அடிப்படை ஆண்டுத் திருத்தமானது பொருளாதாரத்தின் அளவு (மொ.உ.உற்பத்திப் பெறுமதி), மொ.உ.உற்பத்தி வளர்ச்சி, பொருளாதாரத்திற்கான முக்கிய நடவடிக்கைகளின் பங்கு மொ.உ.உற்பத்தி உள்ளார்ந்த விலைச் சுருக்கி தலைக்குரிய மொ.உ.உற்பத்தி போன்ற பல குறிகாட்டிகளைப் பாதித்துள்ளது.

### மொ.உ.உற்பத்தியின் அளவு

2015இன் புதிய அடிப்படை ஆண்டின் கீழ் நடப்புச் சந்தை விலைகளில் 2015இல் மொ.உ.உற்பத்தியின் பெறுமதி ரூ.11,567.0 பில்லியனாக இருந்ததுடன் இது, 2010 ஐக்

வரைபடம் 1: நடப்பு விலைகளில் மொ.உ.உற்பத்தியின் அளவுகள் - 2015 - 2021




மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்


கொண்ட முன்னைய அடிப்படை ஆண்டின் கீழ் ரூ.10,950.6 பில்லியனை விடக் கணிசமாக உயர்வாகக் காணப்பட்டு அளவு மாறுதலைக் குறித்துக் காட்டுகின்றது. 2010இற்குப் பதிலாக 2015இல் நிலவிய இற்றைப்படுத்தப்பட்ட விலைகளும்

அதேபோன்று உள்ளடக்கம் மற்றும் முறையியல் சார்ந்த மேம்பாடுகள் இதற்குக் காரணமாக அமைந்திருக்கக்கூடும்.

## மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதம்

நிலையான விலைகளில் மொ.உ.உற்பத்தியில் சதவீத மாற்றமாகக் காணப்படுகின்ற (உண்மை மொ.உ.உற்பத்தி), மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதமானது அடிப்படை ஆண்டுத் திருத்தத்திலிருந்து பாதிப்படைந்துள்ளது. புதிய அடிப்படை ஆண்டின் கீழ் உள்ளடக்க மற்றும் மதிப்பீட்டு முறையியல்களின் மேம்பாடுகளினூடாக மொ.உ.உற்பத்தி மதிப்பீட்டிற்கு கூட்டிணைக்கப்பட்ட பொருளாதார மற்றும் விலைக் கட்டமைப்பில் மாற்றங்கள் இதற்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது. மேலும், *கொழும்பு பன்னாட்டு நிதியியல் நகரக்* கருத்திட்டத்துடன் தொடர்புடைய காணி மீட்புப் பணியைச் சேர்த்தமையும் புதிய அடிப்படை ஆண்டுத் தொடர்களின் கீழ் 2014 - 2019 காலப்பகுதியில் மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதங்களில் கணிசமான திருத்தங்களுக்கு வழிவகுத்தது. அதற்கமைய, 2015 இலிருந்து 2021 வரையான மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதங்கள் புதிய அடிப்படை ஆண்டின் கீழ் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. வரைபடம் 1இல் காட்டப்பட்டவாறு மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் புதிதாகக் கூட்டிணைக்கப்பட்ட நடவடிக்கைகளிலிருந்தான தாக்கம் உயர்வாகவிருந்த சில ஆண்டுகளில் அவதானிக்கப்படக்கூடியதாக இருந்தது.

**வரைபடம் 2: வருடாந்த வளர்ச்சி ஒப்பீடு - 2016 இலிருந்து 2021 வரை**





மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

## மொ.உ.உற்பத்தியின் பங்கு

மொ.உ.உற்பத்தியானது நான்கு முக்கிய கூறுகளை உள்ளடக்குகிறது. அவையாவன வேளாண்மை, கைத்தொழில், பணிகள் மற்றும் உற்பத்திகள் மீதான உதவுதொகைகளைக் கழித்து வரிகள். அடிப்படை ஆண்டுத் திருத்தத்துடன் இக்கூறுகளிலிருந்தான மொ.உ.உற்பத்திக்கான பங்களிப்பு விசேடமாக கைத்தொழில் நடவடிக்கைகளின் பங்கில் அதிகரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் மற்றும்

**வரைபடம் 3: மொ.உ.உற்பத்திப் பங்கின் ஒப்பீடு - 2021**




மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

உற்பத்திகள் மீதான உதவுதொகைகளைக் கழித்து வரிகள் பங்கில் வீழ்ச்சி என்பவற்றுடன் கணிசமாக மாற்றமடைந்துள்ளது.

## தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானம்

ஒரு நாட்டின் தலைக்குரிய வருமானம் ஒரு நாட்டின் தேசிய வருமானத்தை அந்நாட்டின் நடுவாண்டு சனத்தொகையினால் பிரித்து மதிப்பிடப்படுகின்றது. வருமான மட்டத்தின் அடிப்படையில் நாடுகளை வகைப்படுத்துவதற்கு இக்குறிகாட்டி (ஐ.அ.டொலர் நியதிகளில்) உலக வங்கியினால்[2] பயன்படுத்தப்படுகின்றது. அடிப்படை ஆண்டு மாற்றம் செய்யப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் இலங்கை குறைந்த மத்திய வருமானம் வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருக்கும்.

**அட்டவணை 1: தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி (ரூ.) மற்றும் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி (ஐ.அ.டொலர்) ஒப்பீடு**

| | தலைக்குரிய மொ.தே. உற்பத்தி (ஐ.அ.டொலர்) | | தலைக்குரிய மொ. தே.உற்பத்தி (ரூ.) | |
|---|---|---|---|---|
| | 2015 அடிப்படை ஆண்டு | 2010 அடிப்படை ஆண்டு | 2015 அடிப்படை ஆண்டு | 2010 அடிப்படை ஆண்டு |
| 2015 | 3,961 | 3,745 | 538,495 | 509,103 |
| 2016 | 4,046 | 3,781 | 589,058 | 550,541 |
| 2017 | 4,293 | 3,969 | 654,470 | 605,076 |
| 2018 | 4,248 | 3,947 | 690,463 | 641,500 |
| 2019 | 3,969 | 3,734 | 709,516 | 667,604 |
| 2020 | 3,791 | 3,591 | 703,367 | 666,285 |
| 2021 | 3,921 | 3,722 | 779,890 | 740,328 |

2 பிந்திய உலக வங்கி நாடு வகைப்படுத்தலின் பிரகாரம், ஐ.அ.டொலர்களில் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி: குறைந்த வருமானம்: <1,046 குறைந்த நடுத்தர வருமானம்: 1,046 - 4,095, உயர் நடுத்தர வருமானம்: 4,096 - 12,695, உயர் வருமானம்: >12,695. மூலம்: https://blogs.worldbank.org/opendata/new-world-bank-country-classifications-income-level-2021-2022

## முடிவுரைக் குறிப்புக்கள்

தேசிய கணக்குகள் மதிப்பீடுகள் பொருளாதாரமொன்றின் உண்மைத் துறை அபிவிருத்திகளை அவை பிரதிபலிப்பதால் பொருளாதார பகுப்பாய்விலும் அதேபோன்று கொள்கைத் தீர்மானம் மேற்கொள்கையிலும் முக்கிய பங்காற்றுகின்றனர். எனவே, கிரமமான அடிப்படை ஆண்டு மாற்றல் செயன்முறைகளூடாக தேசிய கணக்குகள் மதிப்பீடுகளுக்கு நீண்ட காலத்தில் ஒரு நாட்டின் பொருளாதாரம் மற்றும் விலைக் கட்டமைப்புக்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு இடமளிப்பது அத்தியவசியமாகும். பன்னாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்நடைமுறைகளைப் பின்பற்றி தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் பல சந்தர்ப்பங்களில் இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகளின் அடிப்படை ஆண்டை மாற்றியமைத்துள்ளது. அண்மைய அடிப்படை ஆண்டு மாற்றச் செயன்முறையின் போது 2010 அடிப்படை ஆண்டிலிருந்து இற்றைப்படுத்தி 2015 அடிப்படை ஆண்டிற்கு தேசிய கணக்குகள் மதிப்பீடுகளை தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் அடிப்படை ஆண்டாக மாற்றம் செய்தது. இதற்கமைய, புதிய அடிப்படை ஆண்டிற்கு விலைகளை இற்றைப்படுத்துவதற்கு மேலதிகமாக பொருளாதார நடவடிக்கைகளின் உள்ளடக்கத்திற்கும் அதேபோன்று முறையியல்களின் தொகுப்பிற்கும் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வடிப்படை ஆண்டு மாற்றச் செயன்முறைக்கு இணையாக இடமளிக்கப்பட்ட மிகமுக்கிய உள்ளடக்க விரிவுபடுத்தல்களிலொன்று தேசிய கணக்குகள் மதிப்பீடுகளுக்கு *கொழும்பு பன்னாட்டு நிதியியல் நகரக்* கருத்திட்டத்துடன் தொடர்புடைய காணி மீட்டல் பணியினை உட்சேர்த்தமையாகும். இது மொ.உ.உற்பத்தி அளவுகள் மற்றும் வளர்ச்சி வீதங்களில் விசேடமாக 2014 - 2019 காலப்பகுதியின் போது மொ.உ.உற்பத்தி அளவுகளிலும் வளர்ச்சி வீதங்களிலும் தளம்பல்களுக்கு வழிவகுத்தது. அடிப்படை ஆண்டு மாற்றம் செய்யப்பட்ட மதிப்பீடுகள், பாரியளவில் *கொழும்பு பன்னாட்டு நிதியியல் நகரக்* கருத்திட்டத்தின் மீட்கப்பட்ட காணி சேர்த்தலிலிருந்து பெருமளவில் உருவாகிய மொ.உ.உற்பத்தியில் அளவு மாறுதலொன்றினை எடுத்துக்காட்டின. அதேபோன்று, ஏனைய பொருளாதார நடவடிக்கைகளின் உள்ளடக்கத்தினையும் தொகுப்பு முறையியலையும் மேம்படுத்துவதன் தாக்கம் என்பவற்றைப் பிரதபலித்தது. மொ.உ.உற்பத்தியின் அளவில் அதிகரிப்பினைத் தொடர்ந்து மொ.உ.உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்படுகின்ற பல பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின் கிரமமான அடிப்படை ஆண்டு மாற்றியமைத்தல் வேறுபட்ட அடிப்படை ஆண்டுகளின் தரவுத் தொடர்களில் தாக்கம் ஏற்படுத்துவதனால், ஆராய்ச்சி நோக்கங்களுக்காக இம்மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளைப் பயன்படுத்துகின்ற போது பொருத்தமான புள்ளிவிபரவியல் நுட்பங்களைப் பயன்படுத்துவதுடன் சேர்த்து வேறுபட்ட அடிப்படை ஆண்டுத் தொடர்களை தனியொரு தொடர்களாக ஒன்றிணைத்து உருவாக்குவது அவசியமாகும்.

## உசாத்துணைகள்:


Department of Census and Statistics-Sri Lanka. [online] Available at: http://www.statistics.gov.lk/. [Accessed 27 June 2022]

Inter-Secretariat Working Group on National Accounts (2009). System of National Accounts: 2008. New York: United Nations.

Kenya National Bureau of Statistics. (2021). Revision and Rebasing of National Accounts Report [Online]. Available at: https://www.knbs.or.ke/wp-content/uploads/2021/09/Revision-and-Rebasing-of-National-Accounts-Report.pdf [Accessed 25 July 2022]

Pakistan Bureau of Statistics. (2022). Methodology 2015-16 Rebasing Report [Online]. Available at: https://www.pbs.gov.pk/sites/default/files//national_accounts/Methodology_2015-16_Rebasing.pdf [Accessed 25 July 2022]

Nepalindata.com. (2021). Dissemination Program on Rebasing of National Accounts Statistics 2021. [online] Available at: https://nepalindata.com/media/resources / items/12/bDissemination_Program_on_Rebasing_of_National_Accounts_Statistics_2021.pdf [Accessed 25 July 2022]

Thenews.com.pk. (2022). Rebasing GDP. [online] Available at: https://www.thenews.com.pk/print/931426-rebasing-gdp#:~:text=The%20National% 20Accounts%20Committee%20(NAC%24296%20billion%20to%20%24346.76%20billion. [Accessed 25 July 2022]

www.nasdaq.com. (2021). South Africa rebases GDP revises economic growth figures 2021-08-25. [online] Available at: https://www.nasdaq.com/articles/south-africa-rebases-gdp-revises-economic-growth-figures-2021-08-25. [Accessed 25 July 2022]

# வெளிநாட்டிலிருந்து பணவனுப்பும் செலவைக் குறைத்து நிதியியல் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் பணவனுப்பல் முறைகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம்

முனைவர் சஜீவனி வீரசேகர
பிரதிப் பணிப்பாளர்
கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்

## அறிமுகம்

பன்னாட்டு பணவனுப்பல்கள் என்பது முக்கியமாக வெளிநாட்டில் வதிகின்ற குடும்பத்தவரால் அல்லது வேறு தனியாட்களால் தாய் நாட்டிற்கு அனுப்பப்படும் பண மாற்றல்களை உள்ளடக்குகின்றன. பன்னாட்டு எல்லைகளைத் தாண்டி மக்கள் இடம்பெயர்தல் தமது தாய்நாடு மற்றும் அவர்கள் சென்றடைந்த நாடு இரண்டிலும் பொருளாதார வளர்ச்சிக்கும் வறுமையை ஒழிப்பதற்குமான அபரிமிதமான உள்ளார்ந்தங்களைக் கொண்டுள்ளது. வறுமையின் தாக்கத்திற்குள்ளான அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளிலுள்ள ஏராளமான மக்கள் தங்களுடைய குடும்ப அங்கத்தவர்களுக்கு ஆதரவளிக்க பணத்தை வீட்டிற்கு அனுப்பும் பொருட்டு வெளிநாட்டு தொழில்நிலையை பெறுவதற்கு பாடுபடுகின்றனர். அத்தகைய புலம்பெயர்ந்தவர்களுக்கென ஐக்கிய நாடுகளின் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளில் ஒன்று, இலகுவானதும் பாதுகாப்பானதுமான நிதியங்களை அனுப்பும் வழிகளுக்கான சிறந்ததொரு அடித்தளத்தை வழங்க வழிவகுப்பதை நோக்காகக்கொண்டுள்ளது. “நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான உலகளாவிய பங்குடைமையை நடைமுறைப்படுத்துவதுடன் புத்துயிரளிக்கும் வழிகளை வலுப்படுத்தல்” என்பதை நோக்காகக் கொண்ட 17ஆம் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்கானது உலகளாவிய அபிவிருத்திக்கான பங்குடைமைகளின் முக்கியத்துவத்தையும் நாடுகளுக்கிடையிலான நிதியியல் தொடர்புகளுக்கு வசதியளித்தல் மற்றும் அவற்றை வலுப்படுத்தல் மீது கவனம் செலுத்துவதற்கான தேவைப்பாட்டையும் வலியுறுத்துகின்றது (உலக வங்கி, 2020). இதற்கமைய, எல்லைகளைத் தாண்டிய நிலைபெறத்தக்க அபிவிருத்தியை ஆதரவளிப்பதற்கான கொள்கைகளை அணிசேர்ப்பதனூடாக பாதுகாப்பானதும் இயலுமைப்படுத்திக் கொடுக்கப்பட்டதுமான சூழ்நிலையொன்றை புலம்பெயர்ந்தவர்களுக்கு வழங்குவதன் மூலம் தாய்நாடு மற்றும் புலம்பெயர்நாடு இரண்டும் அத்தகைய இலக்குகளை அடைய பங்களிப்புச்செய்யலாம்.

குடித்தொகை சக்திகள், உலகமயமாதல் மற்றும் காலநிலை மாற்றம் என்பன ஒன்றிணைவது எதிர்வரும் தசாப்தங்களில் நாட்டின் எல்லைகளுக்குள்ளேயும் எல்லைகளைத் தாண்டியும் புலம்பெயர்வு அழுத்தங்களை அதிகரிக்கும் என உலக வங்கி எதிர்வுகூறியுள்ளது. 2030 அளவில் பணவனுப்பல் செலவை 3 சதவீதத்தை விடவும் குறைப்பதையும் 5 சதவீதத்திற்கும் அதிகமான செலவை ஏற்படுத்தும் பணவனுப்பல் வழிகளை இல்லாதொழிப்பதையும் 10(இ)ஆம் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்கு இலக்காகக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், பணவனுப்பல்கள் செலவின் தற்போதைய உலகளாவிய சராசரி 4 சதவீதமாக காணப்படுகின்றது. இது, 10(இ)ஆம் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்கின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை விட உயர்வானதாகும் (பன்னாட்டுத் தொழில் அமைப்பு, 2020)

அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலை விரைவுபடுத்துவதற்கான உள்ளார்ந்த ஆற்றலை பணவனுப்பல்கள் கொண்டுள்ளபோதிலும், தற்போது நிலவுகின்ற எல்லைகடந்த கொடுப்பனவு முறைமையின் வினைத்திறனின்மை உயர்வான செலவுகளை தோற்றுவிப்பதுடன் இதன்விளைவாக நன்மைகள் குறைவடைகின்றன. உலக வங்கி குறிப்பிடுவதற்கமைவாக(2019), குறைந்த மற்றும் நடுத்தரளவு வருமானத்தை ஈட்டுகின்ற நாடுகளுக்கு 200

ஐ.அமெரிக்க டொலர்களை அனுப்புவதற்கான உலகளாவிய சராசரிச் செலவு 2018இல் அனுப்பப்பட்ட பணத்தின் பெறுமதியின் 6.9 சதவீதம் கொண்ட தொகையாகவிருந்தது. இவ்வதிகரித்த செலவு பயன்பெறு நாடுகளிலுள்ள வறிய குடும்பங்களுக்கு கிடைக்கும் ஒட்டுமொத்த நன்மைகளையும் குறைக்கின்றது. பணவனுப்பல்களின் உயர்வான செலவானது தாய்நாட்டிற்கும் அதேபோன்று அவர்களின் குடும்பங்களுக்கும் கிடைக்கப்பெறும் தொகையினைக் குறைப்பதுடன் ஹவாலா/ உண்டியல் போன்ற முறைசாரா வழிகளை பயன்படுத்துவதற்கும் அவர்களை ஊக்குவிக்கின்றது. அத்தகைய முறைசாரா வழிகளின் பிரபல்யத்தன்மையானது உள்நாட்டு நிதியியல் சந்தைகளின் அபிவிருத்திக்கு பணமனுப்புவதற்கான பங்களிப்பை மட்டுப்படுத்துகின்றது. இதற்கு மேலதிகமாக, அநேகமான முறைசாரா வழிகள் பயன்பெறுநருக்கு சரியான தொகை அனுப்பப்படுகின்றது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளதாலும் உறுதியான உத்தரவாதமின்றிக் காணப்படுவதனாலும், முறைசார பணவனுப்பல் முறைமைகளிலிருந்தே கணிசமான இடர்நேர்வுகள் தோற்றம்பெறுகின்றன. அத்துடன், இது ஓர் அலுவல்சார் முறைமையல்லாததால் முறைப்பாட்டிற்கான ஏதேனும் அடிப்படைகளைக் கொண்டிருப்பதில்லை. மேலும், முறைசாரா வழிகளின் பிரபல்யத்தன்மை, குடும்பங்கள் தமது சேமிப்புக்களுக்கும் முதலீட்டு நோக்கங்களுக்கும் முறைசார் நிதியியல் முறைமையை பயன்படுத்துவதற்கு அவர்களின் இயலாற்றலை மட்டுப்படுத்தக்கூடும் (பொருளதார கூட்டுறவு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு, 2020). பணமாற்றல் செலவைக் குறைத்தல் என்பது புலம்பெயர்ந்தவர்களின் செலவிடத்தக்க வருமானத்தை மட்டும் அதிகரிப்பதின்றி முறைசார் வழிகளினூடாக பணத்தை நாட்டிற்கு அனுப்புவதற்கான ஊக்குவிப்பாகவும் செயல்படுகின்றது. தாய்நாட்டிற்கு பணத்தை அனுப்பும் செலவு குறைவடைதல் முறைசார்ந்த வழிகளை நோக்கி புலம்பெயர்ந்தவர் மாறுதலடைதலை ஊக்குவித்தல் என்பவற்றால் பணவனுப்பல்களை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன (பிரியூட் அன்ட் ஸ்பட்பே:.ாரா, 2008).


**உயர்வான பணவனுப்பல்கள் செலவிற்கான காரணங்கள்**

பணவனுப்பல்களுடன் இணைந்த பரிமாற்றல் செலவை பல்வேறு காரணிகள் நிர்ணயிக்கின்றன. இவை உள்ளடக்குவன:

**I. எல்லை கடந்த கொடுப்பனவுகள் முறைமையின் நிலை:** போதுமானளவில் விருத்தியாகாத எல்லை கடந்த கொடுப்பனவு பொறிமுறைகளானது பணவனுப்பல் செலவை அதிகரிக்கின்ற வினைத்திறனற்ற சிக்கலான ஒருங்கேற்பாடுகளைக் கொண்டமைகின்றன. பணவனுப்பல் பணிகளுக்கு ஆதரவளிப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பு சிலவேளைகளில் போதுமானதற்றுக் காணப்படுவதுடன் சிறிய பெறுமதியுள்ள கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய வங்கித்தொழிலைப் பயன்படுத்துவது செலவுமிக்கதாக இருக்கலாம் (உலக வங்கி பன்னாட்டுத் தீர்ப்பனவுகளுக்கான வங்கி, 2007).

**II. ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் இணங்குவித்தலுக்குமான செலவு:** பணம் தூயதாக்கலையும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதையும் தடுப்பதற்காக "உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்" தேவைப்பாடுகளை விதிக்கின்ற ஒழுங்குறைப்படுத்தல் மற்றும் இணங்குவித்தல் நடைமுறைகளானது பண மாற்றல் தொழிற்படுத்துநர்களுக்கான தொழிற்பாட்டுச் செலவுகளை அதிகரித்துள்ளன. இதற்கு மேலதிகமாக, மோசடியான நடத்தைகளைத் தடுப்பதையும் வாடிக்கையாளர் நலனைப் பாதுகாப்பதையும் நோக்காகக் கொண்ட கம்பனிகளின் பதிவுடனும் உரிமமளித்தல் தேவைப்பாடுகளுடனும் ஒருங்கிணைந்த

**வரைபடம் 1: வேறுபட்ட பிரதேசங்களூடான பணவனுப்பல் செலவு**




மூலம்: பணவனுப்பல் கட்டணங்கள் உலகளாவிய தரவுகள், உலக வங்கி (2019)

ஒழுங்குமுறைப்படுத்தல் செலவும் இங்கே காணப்படுகின்றன.

**III. பணத்தை அடிப்படையாகக்கொண்ட பரிமாற்றல்கள்:** பணத்தை அடிப்படையாகக் கொண்ட பரிமாற்றல்கள் காணப்படுகின்றமை ஒப்படைப்புச் செலவினங்களின் காரணமாக பணவனுப்புகின்ற செலவைக் கணிசமாக பாதிக்கின்றது. தொழில் மாதிரியைப் பொறுத்து தமது தொழிற்பாடுகளை நடாத்துவதற்காக சம்பளங்களையும் வாடகைகளையும் செலுத்தவேண்டியுள்ள உள்நாட்டு முகவர்கள் மூலமான தரகுப்பணத்தை தீர்வைசெய்வதையும் தொழிற்பாட்டு விநியோக நிலையங்களின் செலவு உள்ளடக்குகின்றது (பன்னாட்டுத் தொழில் அமைப்பு, 2020).

**IV. பணவனுப்பல் சந்தையில் காணப்படுகின்ற குறைவான போட்டி:** ரதா (2006) குறிப்பிடுவதற்கமைவாக, வங்கித் திரட்சி உயர்வாகக் காணப்பட்டு போட்டித்தன்மை குறைவாகக்காணப்படும்போது பணவனுப்பல் கட்டணங்கள் உயர்வாக இருப்பதற்கு முனைகின்றன. போட்டியின் அளவானது பணவனுப்பல் அளவிலும் பாரிய பணமாற்றல்/ தொழிற்படுத்துநர்களின் பிரத்தியேகமான ஒழுங்கேற்பாடுகளிலும் சார்ந்துள்ளன. பண மாற்றல் தொழிற்பாட்டாளர்களுக்கும் அஞ்சல் அலுவலகங்களுக்குமிடையில் பிரத்தியேகமான கூட்டாண்மைகளை ஏராளமான நாடுகள் கட்டாயமாக்குகின்றன. அதிகளவான வழிமுறைகள் அதிக போட்டியை ஈர்ப்பதற்கு முனைந்து குறைவான கட்டணங்களுக்கு வழிவகுக்கின்றன. இது விலை உயர்வுகளைத் தூண்டக்கூடியது.

**பணவனுப்பலுக்காக நிதியியல் தொழில்நுட்பத்தை பின்பற்றுதலும் அதன் நன்மைகளும்**

பணத்தை அனுப்புகையில் இணையதளத்தை அல்லது செல்லிடத்தொலைபேசிகளை பயன்படுத்தி பாரம்பரியமற்ற கொடுப்பனவு முறைகளை பின்பற்றுதல் என நிதியியல் தொழில்நுட்ப பணவனுப்பல் பணிகள் வரைவிலக்கணம் செய்யப்படலாம். மாறாக, வங்கிக் கிளைகள், பௌதீக அமைவிட முகவர்கள் (brick-and-mortar agents) அல்லது அழைப்பு நிலையங்கள் ஆகியவற்றுடாக தமது பணிகள் ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனங்களை மரபுரீதியான பணவனுப்பல் பணிவழங்குநர்கள் உள்ளடக்குகின்றன. இத்தகைய இரு முறைமைகளுக்கிடையிலான பிரதான வேறுபாடு அவற்றின் பணிகள் கிடைக்கச்செய்யப்பட்டுள்ள மையங்களுக்கான பெறுவழியாகும். நிதியியல் தொழில்நுட்பமானது நிதியியல் சூழலமைப்பை துரிதமாக மாற்றிவருவதுடன் செலவின் குறைப்பு உட்பட பல்வேறு நன்மைகளை வழங்கி வருகின்றது. உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் தாய்நாட்டிற்கு பணத்தை அனுப்புவதற்காக ஆக்கபூர்வமான சூழலொன்றை உருவாக்குவதற்கு புலம்பெயர் தொழிலாளர்களுக்கு நன்மையளிக்கின்ற பல்வேறு நிதியியல் தொழில்நுட்ப மாதிரிகளை பல நாடுகள் அறிமுகப்படுத்தின.

நிதியியல் தொழில்நுட்பத்தைப் பின்பற்றுகின்ற பணமாற்றல் அமைப்புக்களும் வேறு பணவனுப்பல் பணி வழங்குநர்களும் வழமையான பணிகளை விட கணிசமானளவில் குறைவான செலவில் தமது பணிகளை வழங்கக்கூடியதாகவிருந்தன. இவற்றிற்கு உதாரணமாக செல்லிடத் தொலைபேசி தொழில்நுட்பம், செல்லிடப் பணம், டிஜிட்டல் நாணயங்கள், தொடரேட்டு மற்றும் பகிரப்பட்ட பேரேட்டு தொழில்நுட்பம், இலத்திரனியல் மூலம் அடையாளங்கண்டு சரிபார்த்தல், க்ளவுட் தொழில்நுட்பம் (புலம்பெயர் மற்றும் அபிவிருத்தி பற்றிய உலகளாவிய அறிவுக் கூட்டாண்மை, 2019) என்பன குறிப்பிடப்படலாம். பணவனுப்பல் பணிகள் புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றியதன் பின்னர் இந்தியா-நேபால் வழிமுறையினூடான பணவனுப்பல் செலவு கணிசமாக குறைவடைந்துள்ளது. இத்தகைய தொழில்நுட்பங்கள், பணவனுப்பல் செலவை கணிசமாக குறைப்பதற்கு பங்களிப்புச் செய்வது மாத்திரமன்றி, பரிமாற்றங்களின் வேகத்தையும் அவற்றைக் கண்டுபிடிக்கக்கூடிய தன்மையும் மேம்படுத்துகின்றன (பன்னாட்டுத் தொழில் அமைப்பு, 2020).

இதற்கு மேலதிகமாக, நிதியியல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட முறைகளும் தமது வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கக்கூடிய பல எண்ணிக்கையிலான கொடுப்பனவுத் தெரிவுகளை அதிகரிப்பதற்கு அவர்களை இயலச்செய்தன. வங்கிக் கணக்கினூடாக கொடுப்பனவு செய்தல், பல்வேறு கம்பனிகள் மூலம் வழங்கப்படுகின்ற பற்று அட்டைகள், கடனட்டைகள் அல்லது கூகுள் பே, அப்பிள் பே போன்ற வேறு முறைமைகள் மூலமான கொடுப்பனவுகள் போன்ற பல தெரிவுகளுக்கு மத்தியில் தமக்கு விரும்பியவற்றைத் தெரிவுசெய்வதற்கான சுதந்தரம் வாடிக்கையாளர்களுக்கு உண்டு. விரைவான பரிமாற்றம் மற்றுமொரு சாதகமான சமிக்ஞையாகும். வெளிநாட்டுப் பணப் பரிமாற்றலொன்றைச் செயன்முறைப்படுத்துவதற்கு மரபுசார்ந்த வங்கிப் பரிமாற்றல் ஒரு சில நாட்களை எடுக்கின்ற அதேவேளை அச்செயன்முறையை மிக விரைவாக செயன்முறைப்படுத்துவதற்கான மேம்பட்ட வசதியை நிதியியல் கொண்டுள்ளது. இறுதியாக, அநேகமான நிதியியல் தொழில்நுட்ப பணவனுப்பல் பணிகளுக்கான பரிமாற்றல் கட்டணங்கள் மிகச்சொற்பமானதாகவும் இலவசமானதாகவும் காணப்படுகின்றன.

மேலும், நிதியியல் தொழில்நுட்பமானது தனிநபர்களும் வியாபாரங்களும் பயனுள்ளதானதும் வசதியானதுமான நிதியியல் உற்பத்திகளையும் பணிகளையும்

அணுகுவதற்கான வசதிமிக்கத் தளமொன்றை வழங்குவதன் மூலம் நிதியியல் வசதிகுட்படுத்தலை இலகுவாக்குகின்றது. இறுதியாக, வங்கித்தொழிலைப் பயன்படுத்தாத மற்றும் வங்கித்தொழிலை குறைவாகப் பயன்படுத்தும் மக்கள் நிதியியல் பணிகளுடன் இணைக்கப்படுவதுடன் அவர்களின் பொருளாதார வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டு அவர்களின் நல்வாழ்வும் மேம்படுத்தப்படுகின்றது. வினைத்திறனான பணவனுப்பல் வழிகளும் முறைகளும் பணவனுப்பல் தொடர்பிலான செலவுகளை குறைப்பதற்கு வசதியளிப்பதன்மூலம் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கு உதவுவது மாத்திரமல்லாமல், வளர்ந்துவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்குகின்ற குறிப்பாக, முதலீடு, கல்வி மற்றும் நலம் என்பவற்றில் சாதகமான தாக்கத்தைச் செலுத்துகின்றன. நிதியியல் தொழில்நுட்பக் கம்பனிகளானது எல்லை தாண்டிய பணவனுப்பல்களை பரவச்செய்வதற்குப் பல்வேறு தொழில் மாதிரிகளின் அநுகூலங்களைப் பெற்றுக்கொள்வதுடன் முக்கிய மாதிரிகள் பின்வருமாறு:

### i) செல்லிடத் தொலைபேசி அடிப்படையிலான பணவனுப்பல் தொழில்நுட்பம்

அதிகரித்துள்ள செல்லிடத் தொலைபேசிப் பாவனையானது குறைவான செலவில் பணவனுப்பல் பணிகளை வழங்கும் புதிய மாதிரிகளுடன் கூடிய பன்னாட்டு பணவனுப்பல்களுக்கான செல்லிடத் தொலைபேசி பணப் பாவனையின் அதிகரிப்புக்கு வழிவகுத்துள்ளது. அவை பொதுவாக செல்லிடத் தொலைபேசி வலையமைப்பு தொழிற்படுத்துநர்களால் வழங்கப்படுவதுடன் வாடிக்கையாளர்களின் செல்லிடத் தொலைபேசி இலக்கங்களுடன் இணைந்த இலத்திரனியல் பணப்பைகளைக் கொண்டுள்ளன. இவ்வகையான இலத்திரனியல் பணப்பைகளின் மூலம் தனிநபர்கள் தமது செல்லிடத் தொலைபேசி மூலம் பண மாற்றல்களை மேற்கொள்ளவும், கட்டணங்களைச் செலுத்தவும், பண வைப்புக்கள், மீளெடுத்தல்களைச் செய்யவும் முடிகிறது (ஆசிய அபிவிருத்தி வங்கி, 2016) இவ்வகையான பணவனுப்பல்களுக்கு இணையதளவசதியோ அல்லது திறன்பேசிகளோ தேவையில்லை, செல்லிடத் தொலைபேசி வலையமைப்பு தொடரிணைப்பும் வழக்கமான செல்லிடத் தொலைபேசியும் போதுமானதாகும். செல்லிடத் தொலைபேசிப் பணப் பணிகளின் முன்னேற்றம் போட்டியினை அதிகரித்து, பரிமாற்றல் நேரத்தினைக் குறைத்து, வசதியினை மேம்மடுத்துவதன் மூலம் செலவினைக் குறைப்பதற்கான சாத்தியத்தை ஏற்படுத்தியுள்ளன.

செல்லிடத் தொலைபேசித் தொடர்பாடலுக்கான உலகளாவிய அமைப்பின் (GSMA) செல்லிடத் தொலைபேசிப் பணப் பாவனை பற்றிய ஆய்விற்கமைவாக, சராசரியாக உலகளாவிய பணப் பரிமாற்றல் தொழிற்பாட்டாளர்கள் மூலம் பண மாற்றத்தினை மேற்கொள்வதிலும் 50 சதவீதச் செலவு மலிவாகவும் செல்லிடத் தொலைபேசி பண வெளியேற்றல் கட்டணத்தைக் கருத்திற்கொள்ளும் போது 21 சதவீதம் மலிவானதாகவும் காணப்படுகிறது. செல்லிடத் தொலைபேசிக் கட்டணமானது குறிப்பாக குறைவான பெறுமதி கொண்ட பண மாற்றல்களுக்குப் போட்டியானதாகக் காணப்படுகின்றது (செல்லிடத் தொலைபேசி தொடர்பாடலுக்கான உலகளாவிய அமைப்பு, 2019). எவ்வாறாயினும் இன்னமும் பல நாடுகள் பாரம்பரிய முறையையே தொடர்ந்தும் பயன்படுத்துவதுடன் செல்லிடத் தொலைபேசிப் பணத் தொழில்நுட்பம் உலகின் பல பாகங்களை இன்னும் சென்றடையவில்லை. செல்லிடத் தொலைபேசித் தொடர்பாடலுக்கான உலகளாவிய அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றானது பன்னாட்டு பணவனுப்பல்களை அனுப்பவோ அத்துடன்/ அல்லது பெற்றுக்கொள்ளவோ செல்லிடத் தொலைபேசி பணத்தினை பயன்படுத்தும் 35 அனுப்பும் நாடுகளையும் 40 பெறுநர் நாடுகளையும் தொடர்புபடுத்தும் 184 தனித்துவமான வழிமுறைகள் மட்டுமே காணப்படுவதாக குறிப்பிடுகின்றது. (பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் அபிவிருத்திக்கான அமைச்சு, 2020).

### ii) இணையவழித்தளம் அடிப்படையிலான பணவனுப்பல் தொழில்நுட்பம்

“இணையவழித்தளத் தொழில்நுட்பம்” பணம் அனுப்புபவர்கள் தமது வங்கிக் கணக்குகளை பணவனுப்பற் தளங்களுடன் இணைத்து செல்லிடத் தொலைபேசி செயலிகள் அல்லது இணையவழி செயலிகள் மூலம் பிரத்தியேகமாக இணையவழி பணவனுப்பல் பணிகளை வழங்குவதற்கு இயலச்செய்கிறது. பணப் பரிமாற்றல் செய்யப்படுகின்ற போது பெறுநர்கள் தமது வங்கிக் கணக்குகளுக்கு அல்லது கொடுக்கல் வாங்கல் அட்டைகக்கு நிதியங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். சில இணையவழித் தளங்கள் தனிமுறைமையிலிருந்து இன்னொரு முறைமைக்கான மாதிரியின் கீழ் இயங்குகின்றன, அவை எல்லைகளுக்கூடாக நிதியங்களின் நகர்வின்றி இறுதியான வாடிக்கையாளருக்கு வேறு நாணயத்தில் பணத்தினைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கிறது. ஒருவர் யூரோவினை வழங்கி டொலரினை வாங்கி இன்னொரு வாடிக்கையாளர் டொலரினைக் கொடுத்து யூரோவினை வாங்குவாராயின், இவ்வாறு எதிர்த் திசைகளில் இடம்பெறும் இக்கொடுக்கல்வாங்கல்களை மாற்றல் செய்தல் அல்லது பரிமாற்றல் என்பவற்றிற்குப் பதிலாக இணைத்துவிடப்படுகின்றன. ஒரு பன்னாட்டு பரிமாற்றலுக்குப் பதிலாக இரண்டு உள்நாட்டு பரிமாற்றல்களைப் பயன்படுத்துவதன் மூலம் இந்தத் திட்டம் பணவனுப்பல் பணி வழங்குநர்களுக்கு உத்தியோகபூர்வமான செலாவணி வீதங்களை அறவிட அனுமதிக்கிறது, இது பரிமாற்றல் செலவினைப் பாரியளவில் குறைக்கிறது (ஆசிய மற்றும் பசுபிக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு).

**iii) செல்லிடப் பணப்பைகள் அடிப்படையிலான தொடரேட்டுத் தொழில்நுட்பம்**

மற்றுமொரு நிதியியல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட முறையை உள்ளடக்கும் தொடரேட்டுத் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் செல்லிடப் பணப்பையானது தற்போது பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வருவதுடன் ஏராளமான நாடுகளால் பயன்படுத்தப்பட்டும் வருகின்றன. செல்லிடப் பணப்பைகளானது செல்லிடத் தொலைபேசிகளில் நிறுவப்பட்டுள்ளதுடன் பன்னாட்டு ரீதியான பணமாற்றலை மேற்கொள்வதற்கான வசதியுடன் இணைந்து பல்வேறு வகையான பணிகளையும் வழங்குகின்றது. பகிரப்பட்ட பேரேட்டுத் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான ஒரு நவீன தொழில்நுட்பமே தொடரேட்டுத் தொழில்நுட்பமாகும். இப்புதிய தொழில்நுட்பமானது பணத்தை அனுப்புவதற்கும் பெற்றுக்கொள்வதற்குமான புத்தாக்கமிக்க அணுகுமுறையாகக் காணப்படுவதுடன் இது புதிய டிஜிட்டல் வடிவத்திலான பணம், நூதனமிக்க கொடுப்பனவு உட்கட்டமைப்பு, மற்றும் புதியதொரு பணவனுப்பல் பணி வழங்குநர் வகை என்பவற்றை பயன்படுத்துகின்றது (Finextra, 2020). இத்தகைய தொழில்நுட்பங்களானது சிங்கப்பூர், ஹொங்கொங், இந்தியா போன்ற நாடுகள் உட்பட பல நாடுகளின் பணவனுப்பல் செலவைக் குறைப்பதற்கு உதவிபுரிகின்றன. அனைத்து வகையான நன்மைகளிற்கும் மத்தியில், பண ஒதுக்குகளை விடுவித்தல், இணைத்தரப்பு இடர்நேர்வுகளைக் குறைத்தல், வாடிக்கையாளர்களை சேர்த்துக்கொள்ளல், மற்றும் “உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்” அடையாளங்காணும் செயன்முறை என்பன இத்தொழில்நுட்பங்களின் முக்கிய அநுகூலங்களாக அங்கீகரிக்கப்படலாம் (ஆசிய மற்றும் பசுபிக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு, 2019).

**vi) தன்னியக்கக் கூற்றுப் பொறி அட்டைகளினூடான பணவனுப்பல்**

சில நாடுகள் எல்லை தாண்டிய பணவனுப்பல்களுக்காக தன்னியக்கக் கூற்றுப் பொறி அட்டைகளை வசதியான விதத்தில் பயன்படுத்துகின்றன. பாங்க் ஒப் இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன் நேஷனல் பாங்க் ஆகியன தன்னியக்கக் கூற்றுப் பொறி அட்டைகளினூடாக மேற்கொள்ளப்படும் பணவனுப்பல்களுக்காக குறைந்தளவான கட்டணங்களை அறவிடுவதன் மூலம் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கின்றன. மேலும், வேறு மத்திய வங்கிகளுடன் இணைந்து ஆசியன் நாடுகளிற்கு மத்தியில் தன்னியக்கக் கூற்றுப் பொறி இணைப்புக்களின் உருவாக்கத்திற்காக முயற்சிகளை இந்தோனேசிய அரசாங்கம் மேற்கொண்டது (ஆசியன் கொடுப்பனவு முயற்சிகள்). இது மலேசியாவிலும் (மேபாங்க்) இந்தோனேசியாவிலுமுள்ள (பாங்க் மந்த்ரி) தனியார் வங்கிகளுக்கிடையிலான முன்னோடி இணைப்புச் செயற்றிட்டமொன்றை ஈடுபடுத்துகின்றது. இதற்கு மேலதிகமாக, ஒவ்வொரு நாட்டினதும் வலையமைப்பு தொழிற்பாட்டாளர்களூடாக இந்தோனேசிய மற்றும் மலேசிய வங்கிகள்/ நிறுவனங்கள் என்பவற்றுக்கிடையிலான இருபுடை தன்னியக்கக் கூற்றுப் பொறி இணைப்புக்களின் உருவாக்கத்திற்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

**நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளை எய்தி பாதுகாப்பான பாதையினை உறுதிசெய்தல்**

புலம்பெயர்ந்தவர்களிற்கு மத்தியிலும் கொள்கை வகுப்பவர்களுக்கு மத்தியிலும் முக்கியமான கரிசனையொன்றாக அதிகளவான பணவனுப்பல் செலவு காணப்படுகின்றபோதும், இது உள்நாடு மற்றும் வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்கள் இரண்டிலும் ஈடுபடுகின்றமையால் பணவனுப்பல் செலவைக் குறைத்தல் என்பது சவால்மிக்க இலக்கொன்றாகக் காணப்படுகின்றது. எனவே தனித்தனியாக இக்கரிசனையில் செயற்படும் தனியொரு நாடாக இம்முயற்சியை அடைவது கடினமாகும். நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுடன் தொடர்புடைய இவ்விலக்கை அடையும் பொருட்டு, நாடுகள் பல்வேறுபட்ட முனைகளுக்கிடையில் தொழிற்பட்டு ஏனைய நாடுகளுக்கு மத்தியில் பங்குடைமைகளை உருவாக்க வேண்டும். விரைவானதும் பாதுகாப்பானதும் மலிவானதுமான பணவனுப்பல்களின் மாற்றலை ஊக்குவிப்பதற்கும் புலம்பெயர்ந்தவர்களின் நிதியியல் வசதிக்குட்படுத்தலை பேணிவளர்த்தலுக்கும் நிலைபெறத்தகக்க அபிவிருத்தி இலக்குகளாலும் புலமபெயர்தலின் உலகளாவிய உடன்படிக்கையாலும் முன்மொழியப்பட்ட சிறந்த நடத்தைகளில் சில பின்வருமாறு:

- பணவனுப்பல் சந்தை ஒழுங்குமுறைப்படுத்தலை உகப்பாக்கம்செய்து வழிமுறைகளுடன் இணைக்கும் பணவனுப்பல் உட்கட்டமைப்பில் ஒன்று மற்றொன்றுடன் இயங்கக்கூடியதன்மையை அதிகரித்தல்.
- போட்டித்தன்மை வாய்ந்ததும் புத்தாக்கம்மிக்கதுமான பணவனுப்பல் சந்தையை ஊக்குவிக்கின்ற ஆக்கபூர்வமான கொள்கை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புக்களைத் தாபித்தல்
- பணவனுப்பல் பரிமாற்றல்களுக்கான குறைந்தளவு செலவு, மேம்படுத்தப்பட்ட வேகம், மற்றும் அதிகரித்த பாதுகாப்பு என்பவற்றுடன் புத்தாக்கமான தொழில்நுட்பத் தீர்மானங்களை விருத்திசெய்கின்ற அதேவேளை, கிரமமான வழிகளினூடாக பரிமாற்றல் அளவுகளை அதிகரித்தல்
- பாலின அடிப்படையில் பதிலிறுக்கக்கூடிய விநியோக வழிகளை ஆரம்பித்தல்

- பணவனுப்பல் பரிமாற்றல் சந்தையில் வெளிப்படைத்தன்மையையும் போட்டி மட்டத்தையும் அதிகரித்தல்

பணவனுப்பல் செலவைக் குறைப்பதில் நிதியியல் தொழில்நுட்பத்தின் பங்களிப்பைக் கருத்திற்கொள்கையில், பணவனுப்பல் கொடுக்கல்வாங்கல்களுக்காக இலங்கையை ஏனைய நாடுகளுடன் இணைத்து நிதியியல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை ஊக்குவிப்பது மிக முக்கியமானதாகும். இதற்கமைய, பணவனுப்பல்களின் முறைசார்ந்த வழிகளிலுள்ள மிகவும் தேவைப்படுகின்ற விரிவாக்கத்திற்கு நிதியியல் தொழில்நுட்பத்தை பின்பற்றுகின்றமை பங்களிப்புச் செய்யக்கூடும். இதனால் செயன்முறையும் பாதுகாக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் எந்தவொரு தொழில்நுட்பமும் சில இடர்நேர்வுகளுடன் ஒருங்கிணைக்கப்படலாம். டிஜிட்டல் மோசடி, தனிமுறைமையிலிருந்து இன்னொரு முறைமைக்கான தளத்தின் சீர்குலைவுகள் அத்துடன் பொறுப்பற்ற நுண்பாகக் கொடுகடன் கடன்வழங்கல் நடத்தைகளின் விளைவாக ஏற்படும் கடன்பெறுநர் இடர்பாடு ஆகிய அதிகரிக்கும் நிகழ்வுகளே அத்தகைய தொழில்நுட்பங்களிலிருந்து தோன்றக்கூடிய சில இடர்நேர்வுகளாக எடுத்துக்காட்டப்படுகின்றன (உலக வங்கி, 2021). இடர்நேர்வுகளில் சில புதியவையாக காணப்படுகின்ற அதேவேளை, ஏராளமானவை புதிய வியாபார மாதிரிகள், உற்பத்தி அம்சங்கள் மற்றும் வழங்குநர் வகைகள் என்பவற்றிலிருந்து தோன்றுகின்ற நிதியியல் சந்தைகளில் ஏற்கனவே காணப்பட்ட புதிய இடர்நேர்வுக் குறிகாட்டிகளாகும்.

எனவே, ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் உட்பட அனைத்து ஆர்வலர்களும் முறைசார்ந்த நிதியியல் அபிவிருத்தி மற்றும் புத்தாக்கம் என்பவற்றுக்காக இடர்நேர்வு தணிப்புக் கரிசனைகளை மட்டுமன்றி சாத்தியமான உள்ளார்ந்தங்களையும் கருத்திற்கொண்டு அவசியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதன் வாயிலாக இடர்நேர்வைத் தணிப்பதற்கும் குறைப்பதற்கும் விழிப்புடன் செயற்பட வேண்டும். தரவுகளைப் பரிமாற்றுவதில் உயர்ந்த பாதுகாப்பு நியமங்களைப் பின்பற்றுதலும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்ட தீர்ப்பனவு அளவுருக்களும் வலுவானதும் பாதுகாப்பனதுமான பணவனுப்பல் பாய்ச்சல்களை நிறுவுவதற்கு மிகவும் இன்றியமையாதவொன்றாக காணப்படுகின்றன.

**உசாத்துணைகள்**


ILO (2020), A comprehensive analysis of remittances Sri Lanka, International Labour Organization.

OECD (2020), Can Blockchain technology reduce the cost of remittances? Friederike Rühmann, Sai Aashirvad Konda, Paul Horrocks, Nina Taka

Freund, C., & Spatafora, N. (2008) Remittances, transaction costs, and informality. Journal of development economics, 86(2), 356-366.

BIS (2007), General principles for international remittance services, Bank for International Settlements https://www.bis.org/cpmi/publ/d76.pdf.

Ratha, D. (2006), Reducing remittance fees, World Bank, Retrieved from http://siteresources.worldbank.org/EXTFINANCIALSECTOR/Resources/282884-1239831335682/6028531-1273159501046/Ratha_GEP2006Chapter6- reducingremittancefees.pdf.

ADB&WB (2018), Migration and Remittances for Development in Asia, (Asian Development Bank and World Bank)

NST Business (2017), Project Greenback 2.0 helps to reduce average cost of remitting funds in Johor Baru to . Straits Times. 30 November. Available at: https://www.nst.com.my/business/2017/11/309337/projectgreenback-20-helps-reduce-average-costremitting-funds-johor-bar

GSMA (2019), State of mobile internet connectivity, https://www.gsma.com/mobilefordevelopment/wp-content/uploads/2019/07/GSMA-State-ofmobile-Internet-Connectivity-Report-2019.pdf.

GSMA (2018), State of the industry report on mobile money, https://www.gsma.com/r/state-ofthe-industry-report/.

KNOMAD (2019), "Migration and Remittance: Recent Developments and Outlook. Migration and Development". Available at: https://www. Knomad.org

Finextra (2020), How Blockchain Is Going to Change the Remittance in 2020 https://www.finextra.com/blogposting/18367/how-blockchain-is-going-to-change-the-remittance-in-2020

OECD (2020), Development matters, Remittances during COVID-19: Reduce costs to save livelihoods. Retrieved from https://oecd-development-matters.org/2020/05/27/remittances-during-covid-19-reduce-costs-to-save-livelihoods/

UNSCAP (2019) Hongjoo Hahm, Tientip Subhanij and Rui Almeida, FinTech remittances in Paradise: a path to sustainable development.

World Bank (2020) Remittance: a lifeline for many economies, Retrieved from https://datatopics.worldbank.org/sdgatlas/goal-17-partnerships-for-the-goals/

World Bank (2021), Addressing consumer risks in fintech to maximize its benefits, https://blogs.worldbank.org/psd/addressing-consumer-risks-fintech-maximize-its-benefits

# இரு நாணயங்களுக்கிடையிலான செலாவணி வீதங்களை எது நிர்ணயிக்கின்றது?

சுரேக்கா கெடவல
மேலதிகப் பணிப்பாளர்
பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்

**அறிமுகம்**

அண்மைக் காலங்களில், இலங்கையில் செலாவணி வீதமானது கொள்கை கலந்துரையாடல்களிலும் விவாதங்களிலும் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. செலாவணி வீத உறுதிப்பாட்டின் முக்கியத்துவம், செலாவணி வீத தளம்பல் காரணமாக ஏற்பட்ட தாக்கம், செலாவணி வீதத் தளம்பலினால் நட்டமடைபவர்கள் மற்றும் இலாபமடைபவர்கள், ஒரு நாட்டின் செலாவணி வீதத்தை நிர்ணியிக்கின்ற காரணிகள் என்பன இந்நாட்களில் பெருமளவில் கலந்துரையாடப்படுகின்ற விடயங்களாகும். எனவே, உலகிலுள்ள செலாவணி வீத முறைமைகளின் பரிணாமம், நிலையான மற்றும் மிதக்கும் செலாவணி வீத முறைமைகளுக்கிடையிலான வேறுபாடுகள், இலங்கையில் செலாவணி வீத முறைமைகளின் பரிணாமம், செலாவணி வீதத்தின் முக்கிய நிர்ணய காரணிகள் மற்றும் இலங்கையிலுள்ள அண்மைய செலாவணி வீதப் போக்கு போன்றன உள்ளடங்கலாக செலாவணி வீதத்துடன் தொடர்புடைய சில பிரதான விடயங்களை விபரிப்பது இக்கட்டுரையின் குறிக்கோளாக அமைகின்றது.

எளிமையான வார்த்தைகளில், செலாவணி வீதம் என்பது ஒரு நாணயம் மற்றொரு நாணயத்துடன் பரிமாற்றம் செய்யப்படுகின்ற வீதமாகும். இரு தேசங்களுடைய நாணயங்களின் ஒப்பீடாக குறிப்பிடப்படுகின்ற ஒரு சார்பு பெறுமதியாகும். உதாரணமாக, ஐக்கிய அமெரிக்க டொலரொன்றுக்கு பரிமாற்றம் செய்யப்பட வேண்டிய இலங்கை ரூபாய்களின் எண்ணிக்கையை செலாவணி வீதம் எடுத்துரைக்கின்றது. 2022 ஓகத்து இறுதியிலுள்ளவாறு இலங்கை ரூபாய் 362.00ஆக காணப்பட்ட ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபாய் செலாவணி வீதம், ஒரு ஐ.அ.டொலரை பரிமாற்றம் செய்வதற்கு ரூ.362.00 தேவைப்படுகிறது என்பதைக் குறிக்கின்றது. மற்றொரு நாணயத்தின் நியதிகளில், உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி உயர்வடையும் போது, அது உள்நாட்டு நாணயத்தின் மதிப்பேற்றம் என அழைக்கப்படுகிறது. அதேபோன்று, மற்றொரு நாணயத்தின் நியதிகளில் உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி குறைவடைவது தேய்மானம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

பரிமாற்று ஊடகமாக பணத்தைப் பயன்படுத்துவதற்கு முன்னர், ஒரு பொருளுக்கு மற்றொரு பொருளைப் பரிமாற்றம் செய்வதன் மூலமாக, நாடுகள் பொருட்களை நேரடியாக வர்த்தகம் செய்தன, இது "பண்டமாற்று முறை" என்று அழைக்கப்படுகிறது. எனினும், பண்டமாற்று முறையில் காணப்பட்ட பல பிரதிகூலங்கள் காரணமாக, வர்த்தகத்தை வசதிப்படுத்துவதற்கு இறுதியில் பணம் உருவாக்கப்பட்டது. ஆரம்பக் காலங்களில், தங்கம் அல்லது வெள்ளி போன்ற உள்ளார்ந்த மதிப்புக்களைக் கொண்ட பண்டங்கள் வர்த்தகத்தை வசதிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டன (பண்டப் பணம்). குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர், காகித நாணயத்தின் நன்மைகள் வெளிப்படத் தொடங்கின (அரச நிர்ணயப் பணம்). இருப்பினும், ஒவ்வொரு நாடும் அதற்கேயுரிய கொள்வனவு சக்திகளைக் கொண்டு அதன் சொந்த நாணயங்களை வெளியிடத் தொடங்கியமையினால், பன்னாட்டு வர்த்தகம் அதிகளவில் சிக்கல்வாய்ந்ததாக தோற்றம்பெற்றது. இதன்விளைவாக, ஒன்றில் இணங்கிய நிரம்பல், கேள்வி அல்லது சந்தைச் சக்திகளால் நிர்ணயிக்கப்பட்ட நாடுகளுக்கிடையிலான செலாவணி வீதத்திற்கமைவாக ஒரு நாணயத்திற்கு மற்றொரு நாணயத்தை பரிமாற்றுவதற்கான வழிமுறைகளை வழங்குவதன் மூலமாக பன்னாட்டு வர்த்தகத்தை இயலச்செய்து நாடுகள் அவற்றின் சொந்த நாணயக் கொள்கையை முன்னெடுக்கத் தொடங்கின.

**உலக செலாவணி வீத முறைமைகளின் பரிணாமம்**

கடந்த நூற்றாண்டில், செலாவணி வீத முறைமைகள் காலத்திற்கு காலம் மாற்றமடைந்தன. 1876 தொடக்கம் 1933

வரையான காலப்பகுதியில் "தங்கப் பரிமாற்றல் நியமம் (Gold Exchange Standard)" ஆதிக்கம் செலுத்தியது. இங்கு முக்கியமாக, செலாவணி வீதமானது ஒரு அவுன்ஸ் தங்கத்திற்கு உரிய நாணயத்தின் ஒப்பீட்டு மாற்றத்தை சார்ந்து காணப்பட்டது. ஐரோப்பிய நாடுகள் இராணுவச் செலவினங்களுக்கு நிதியளிக்கும் பொருட்டு அவற்றின் ஒதுக்குகளிலிருந்த தங்கத்தின் பெறுமதியை விஞ்சி நாணயத்தை அச்சிட்டதன் காரணமாக, தங்கத்தைப் பரிமாற்றம் செய்வதற்கான நியமம் இரண்டாம் உலகப்போரின் போது வீழ்ச்சி கண்டது. அதன்பின்னர், ஆபரண வடிவிலான தங்கம் தவிர, தங்கத்தின் தனியார் உடைமையாக வைத்திருத்தல் சட்டவிரோதமானது என்று 1933இல் ஐக்கிய அமெரிக்க சனாதிபதியாகவிருந்த பிரான்கிலின் ரூஸ்வெல்ட் பிரகடனப்படுத்தியமையுடன் இம்முறைமை முடிவுக்கு வந்தது.

தங்கத்தைப் பரிமாற்றம் செய்வதற்கான நியம முறைமை முடிவுற்றதன் பின்னர், 1944ஆம் ஆண்டில் நிலையான செலாவணி வீதங்கள் முறைமை உருவாக்கப்பட்டது. இதற்கமைவாக, ஐக்கிய அமெரிக்க டொலர் பன்னாட்டு ஒதுக்கு நாணயமாக தெரிவுசெய்யப்பட்டது. இதற்கு வசதிப்படுத்துவதற்கு, 45 நாடுகளின் பிரதிநிதிகளுடன், "பிரெட்டன் வூட்ஸ் முறைமை" நிறுவப்பட்டது. உலகளாவிய ரீதியில் நாடுகளினுடைய பொருளாதார நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு 1945இல் பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. தொடக்கத்தில் போரினால் பாதிப்படைந்த பொருளாதாரங்களின் மீள்கட்டுமானத்திற்காகவும் அதன் பின்னர் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்காகவும் நிதியியல் உதவியை வழங்கும் பொருட்டு, பன்னாட்டு நாணய நிதியத்தையும், உலக வங்கி என பொதுவாக அறியப்பட்ட மீள்கட்டுமான மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கியையும் இது உள்ளடக்கியது. உலகளாவிய நாணய ஒத்துழைப்பை தூண்டுவதற்கும் வளர்ந்துவரும் நாடுகளுக்கு உதவி வழங்குவதற்கும் தேசம்கடந்த நிறுவனமாக செயற்படும் நோக்கத்திற்காக 1947ஆம் ஆண்டில் பன்னாட்டு நாணய நிதியம் செயற்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, நாடுகளுக்கிடையிலான பன்னாட்டு வர்த்தகத்தை மேம்படுத்தும் பொருட்டு, 1947ஆம் ஆண்டில் தீர்வை மற்றும் வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டது. தீர்வை மற்றும் வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கையானது பின்னர் உலக வர்த்தக அமைப்பாக மாற்றீடுசெய்யப்பட்டது. பிரெட்டன் வூட்டஸ் முறைமை 1971ஆம் ஆண்டின் ஆரம்பகாலம் வரை செயற்பாட்டில் இருந்தது.

பெறுமதி குறைந்த ஐ.அ.டொலரை அடிப்படையாகக் கொண்ட நிலையான செலாவணி வீதங்களின் புதிய தொகுதியுடன் 1971 திசெம்பரில், மிகக்குறுகிய காலக்கட்டத்திற்கு, "ஸ்மித்சோனியன் உடன்படிக்கை" செயற்பாட்டிற்கு வந்தது. 10 கைத்தொழில்மயமான நாடுகளின் நாணயங்கள் ஐ.அ.டொலருக்கு நிலையான செலாவணி வீதத்தில் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. பெல்ஜியம், கனடா, பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி, யப்பான், நெதர்லாந்து, சுவிடன், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகியன அந்நாடுகளாகும். 1973ஆம் ஆண்டில் ஊக வணிகர்கள் ஐ.அ.டொலரை பெறுமதியிழக்கச் செய்தமையால், ஸ்மித்சோனியன் செலாவணி வீத முறைமையை நாடுகள் கைவிட்டு மிதக்கும் செலாவணி வீதங்களுக்கு சாதகமாக தளர்ந்தன.

ஸ்மித்சோனியன் செலாவணி வீத முறைமையின் தோல்வியைத் தொடர்ந்து, 1976இல் புதிய பன்னாட்டு நாணய முறைமை தொடர்பில் உடன்படும் பொருட்டு பன்னாட்டு நாணய நிதிய உறுப்பு நாடுகள் ஜமைக்காவில் கூடின. இதற்கமைவாக, மிதக்கும் செலாவணி வீத முறைமையை நிறுவுவதற்கு "ஜமைக்கா உடன்படிக்கை" உருவாக்கப்பட்டு இன்று வரையில் வேறுபட்ட பதிப்புகளில் இவ்வுடன்படிக்கை தொடர்கின்றது. இம்முறைமையின் கீழ், நாணயங்கள் ஒன்றுக்கொன்று எதிராக மிதப்பதுடன் அவற்றின் நாணயத்தை நிலைப்படுத்துவதற்கான அவசியம் காணப்படுமாயின், தலையீடு செய்வதற்கு தொடர்புடைய அரசாங்கங்களுக்காக சுதந்திரத்துடன் நாணயங்களின் கேள்வி மற்றும் நிரம்பல் மூலம் செலாவணி வீதங்கள் நிர்ணயிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, சென்மதி நிலுவை சவால்கள் காணப்படுகின்ற நாடுகளுக்கு இறுதி முயற்சியாக கடன் வழங்கும் பணத்தை கூட்டி இணைப்பதற்கும் பன்னாட்டு நாணய நிதியத்தின் குறிக்கோள்கள் விரிவாக்கப்பட்டன. அப்போதிருந்து, செலாவணி வீத முறைமைகளை நிர்ணயிப்பதற்கு நாடுகள் அவற்றின் மத்திய வங்கிகள் ஒன்றில் தலையிடுவதற்கு அனுமதித்து அல்லது சந்தைச் சக்திகளை அனுமதித்து நாடுகள் நிலையான அல்லது மிதக்கும் செலாவணி வீத முறைமைகளை தெரிவுசெய்துள்ளன. கடந்த நூற்றாண்டில் உலகில் நிலவிய செலாவணி வீத முறைமைகளின் தொகுப்பு கீழே அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளது:

**அட்டவணை 1- செலாவணி வீத முறைமைகளின் தொகுப்பு**

| முறைமையின் பெயர் | காலப்பகுதி/ கைச்சாத்திட்ட ஆண்டு | தொகுப்பு |
|---|---|---|
| தங்கப் பரிமாற்றல் நியமம் | 1876 - 1933 | ஒரு அவுன்ஸ் தங்கத்திற்கு ஒப்பீட்டு மாற்றத்தின் தன்மையின் அடிப்படையில் நாணயத்தின் பெறுமதி தீர்மானிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| பிரட்டன் வூட்ஸ் முறைமை | 1944 - 1971 ஆரம்ப காலம் | நிலையான செலாவணி வீதங்கள் ஐ.அ.டொலரை பன்னாட்டு ஒதுக்கு நாணயமாகப் பயன்படுத்தின |
| ஸ்மித்சோனியன் உடன்படிக்கை | 1971 திசெம்பர் தொடக்கம் 1973 பெப்புருவரி வரை | பெறுமதி குறைந்த ஐ.அ.டொலரை அடிப்படையாகக் கொண்ட புதிய நிலையான செலாவணி வீதங்களின் தொகுதி |
| ஜமைக்கா உடன்படிக்கை | 1976இல் | மிதக்கும் செலாவணி வீத முறைமைகளை முறைப்படுத்தியது |

**நிலையான செலாவணி வீத முறைமைகளும் மிதக்கும் செலாவணி வீத முறைமைகளும்**

உலகமயமாக்கலுடன் இணைந்து பன்னாட்டு வர்த்தகம் விரிவடைந்தது. எனினும், வர்த்தக திகதிக்கும் பொருட்களின் அல்லது சேவைகளின் விநியோகத் திகதிக்கும் மற்றும் கொடுப்பனவுத் திகதிக்குமிடையில் கால இடைவெளியொன்று காணப்படுகின்றது. இக்காலப்பகுதியில் செலாவணி வீதங்கள் கணிசமானளவு தளம்பலடையுமாயின், வியாபாரப் பங்காளர்களுக்கு அது சாதகமாக அமையாதிருக்கலாம் என்பதுடன் செலவுகளையும் வருவாய்களையும் மதிப்பிடுவதற்கு கடினமாக இருக்கக்கூடும். நிலையான செலாவணி வீதத்தைக் கொண்டிருத்தல், செலவுகளினதும் வருவாய்களினதும் சிறந்த மதிப்பீடுகளுக்கு ஆதரவளிக்கின்றன. இதற்கமைவாக, சில நாடுகள் சந்தைத் தளம்பல்களிலிருந்து தம்மைப் பாதுகாக்கும் பொருட்டும் அவற்றின் ஏற்றுமதிகளுக்கான பன்னாட்டு போட்டித்தன்மையை பாதுகாப்பதற்கும் அவற்றின நிலையான செலாவணி வீதத்தை நிர்ணயிப்பதற்கு அல்லது நிலைநிறுத்துவதற்கு விரும்புகின்றன. நிலையான செலாவணி வீதம் என்பது நாணயமொன்றின் விலை மற்றொரு நாணயத்தின் விலைக்கு எதிராக நிலைப்படுத்தப்படுவதாகும். இது "நிலையான செலாவணி வீதம்" எனவும் அறியப்படுகின்றது. திட்டமிடப்பட்ட அடிப்படை அளவினுள் நாட்டின் நாணயத்தின் பெறுமதியைப் பாதுகாப்பது நிலையான செலாவணி வீதத்தின் நோக்கமாக காணப்படுகின்றது. இருப்பினும், நாணயத்தின் பெறுமதி நிர்ணயத்திற்குக் கீழே குறைவடையும் போது, நாட்டினுடைய வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைப் பயன்படுத்தி உள்நாட்டு நாணயத்தை கொள்வனவு செய்வதன் மூலம் தொடர்புடைய நாட்டின் மத்திய வங்கியானது சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணியை வழங்க வேண்டியிருப்பதால், நாணயத்திற்கு நிலையான செலாவணி வீதத்தை நிர்ணயிப்பது செலவுமிக்கதாக காணப்படுகின்றது. ஒற்றை நாணயத்திற்கு எதிராக நாணயத்தின் பெறுமதியை நிலை நிறுத்துகின்ற இலகுவான வழிமுறை செலாவணி வீதத்தை நிர்ணயிப்பதாகும். இதற்கு மேலதிகமாக, சில நாடுகள் ஒரு நாணயத்திற்கு பதிலாக, நாணயக் கூடைகளுக்கு பெறுமதியை நிர்ணயிக்கின்றன. பூட்டான், டென்மார்க், புருணை, ஹொங்கொங், பல்கேரியா, ஜோர்தான், லெபனான், நமிபியா, சவுதி அரேபியா, கட்டார், நேபாளம், ஈராக் போன்ற சில நாடுகள் நிலையான செலாவணி வீத முறைகளைப் பின்பற்றுகின்றன *(ப.நா.நி: செலாவணி ஏற்பாடுகள் மற்றும் பரிவர்த்தனைக் கட்டுப்பாடுகள் பற்றிய ஆண்டறிக்கை 2018, 2019 ஏப்பிறல் திகதியிடப்பட்டது).*

மாறாக, மிதக்கும் செலாவணி வீதம் என்பது நாணயத்தின் விலை வெளிநாட்டுச் செலாவணி சந்தைச் சக்திகளினால் தீர்மானிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படுகிறது. அதாவது தொடர்புடைய நாணயங்களுக்கான கேள்வியும் நிரம்பலுமாகும். இது "தளம்பலடையும் செலாவணி வீதம்"எனவும் அறியப்படுகின்றது. மிதக்கும்/ தளம்பலடையும் செலாவணி வீதத்திற்கமைவாக, வெளிநாட்டுச் செலாவணி சந்தை பொறிமுறைக்கு அதாவது அது தொடர்புடைய நாணயங்களுக்கான கேள்விக்கும் நிரம்பலுக்கும் ஏற்ப நாணயத்தின் பெறுமதி தளம்பலிற்கு அனுமதிக்கப்படுகிறது. உலகின் பெரும்பாலான முக்கிய பொருளாதாரங்களின் நாணயங்கள் தங்குதடையின்றி மிதப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. மிதக்கும் செலாவணி வீதத்தைப் பேணுவதன் மூலம், நாடுகள் தமக்கு வேண்டிய பொருளாதார கொள்கைகளைப் பின்பற்ற முடியும். இருப்பினும், சந்தை விலைக் குறிக்கப்பட்ட இழப்புக்கள், நாணயத் தேய்மானம் போன்றன உள்ளடங்கலாக உயர்ந்தளவான வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளுக்கு மிதக்கும் செலாவணி வீதங்கள் உட்படுகின்றன. ஆகையால், அத்தகைய வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்தம், முன்னோக்கிய ஒப்பந்தங்கள், தெரிவுகள் மற்றும் எதிர்காலங்கள் போன்ற குறித்துரைக்கப்பட்ட காப்புக்களை நாடுகள் பயன்படுத்துகின்றன. இவ்விரு செலாவணி வீத முறைமைகளின் முக்கிய வேறுபாடுகளை கீழே அட்டவணை 2 காட்டுகின்றது:

**அட்டவணை 2 - இரு செலாவணி வீத முறைமைகளுக்கிடையிலான முக்கிய வேறுபாடுகள்**

| | நிலையான செலாவணி வீத முறைமை | மிதக்கும் செலாவணி வீத முறைமை |
|---|---|---|
| அ) | நாணயத்தின் பெறுமதி கட்டுப்படுத்தப்படுகின்றது | கேள்வி மற்றும் நிரம்பல் மூலம் தீர்மானிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றது |

| | | |
|---|---|---|
| ஆ) | அரசாங்கத்தினால் அல்லது மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்றது | சந்தைச் சக்திகளுக்கேற்ப செலாவணி வீதம் வேறுபடுகின்றது |
| இ) | நிலையான செலாவணி வீத முறைமையைப் பேணுவதற்கு, வெளிநாட்டு நாணய ஒதுக்குகள் பாதுக்கப்பட வேண்டும் | வெளிநாட்டு ஒதுக்குகளை குறைந்த மட்டமொன்றில் பேணலாம் |
| ஈ) | நிலையான செலாவணி வீதத்தை நாடு பயன்படுத்துகின்ற போது, நாணய இடர்நேர்வுகளுக்கு காப்பளிக்க வேண்டிய அவசியமில்லை | நாணய இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு காப்பு சாதனங்கள் தேவைப்படுகின்றன |
| உ) | நாணய விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் குறைமதிப்பீடு என்றும் மீள்மதிப்பீடு என்றும் அழைக்கப்படுகின்றன | நாணய விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் தேய்மானம் என்றும் மதிப்பேற்றம் என்றும் அழைக்கப்படுகின்றன |
| ஊ) | அரசாங்கக் கொள்கைகளில் ஏற்படும் மாற்றம் பற்றிய வதந்தி வரும்போது மாத்திரம் ஊகம் இடம்பெறுகின்றது | ஊகம் மிகவும் பொதுவானதாக காணப்படுகின்றது |
| எ) | பண நிரம்பல், உள்நாட்டு வட்டி மற்றும் விலை ஆகியவற்றிலுள்ள மாறுபாட்டின் ஊடாக தொழிற்படுகின்றது | வெளிநாட்டுச் செலாவணி வீதத்தில் ஏற்படும் மாற்றங்களின் மூலமான வெளிவாரி உறுதியற்றத்தன்மையை நீக்குவதற்கு செயற்படுகிறது |

நிலையான மற்றும் மிதக்கும் செலாவணி வீத முறைமைகளின் அநுகூலங்களையும் பிரதிகூலங்களையும் பகுப்பாய்வு செய்கின்றபோது, நிலையான செலாவணி வீதம் நாணய உறுதிப்பாட்டினை வழங்குகிறது. ஆகையால், வெளிநாட்டு நாணயத்தின் பயன்பாட்டாளர்கள் எந்நேரத்திலும் அதன் நாணயத்தின் மதிப்பை அறிவார்கள். இதனால், நாணய இடர்நேர்விற்கு காப்பளிப்பதற்கு எவ்வித காப்பு பொறிமுறைகளும் தேவைப்படுவதில்லை. இது நாட்டிற்கான வெளிநாட்டு நேரடி முதிலீடுகளை ஈர்ப்பதற்கு ஆதரவளிக்கின்றது. இதற்கு மேலதிகமாக, நாணயமானது பிரபல்யமான நாணயத்திற்கு நிலையான செலாவணி வீதத்தை நிர்ணயிக்குமாயின், அது பணவீக்கத்தின் விளைவுகளை குறைப்பதற்கும் வழிவகுக்கும். மிதக்கும் செலாவணி வீத முறைமையைப் பொறுத்தவரையில், இது ஒரு சுயதிருத்தம் செய்கின்ற பொறிமுறையாகும் என்பதுடன் அரசாங்கத்தின் அல்லது மத்திய வங்கியின் நடவடிக்கைகளைச் சார்ந்தது அல்ல. சந்தைச் சக்திகள் நாணயத்தின் பெறுமதியை தானாகவே நிர்ணயிக்கும். இது வெளிநாட்டு பொருளாதார நிகழ்வுகளிலிருந்து பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்கு ஆதரவளிக்கிறது. கேள்வியும் நிரம்பலும் எவ்வித வரையறைகளுமின்றி அளிக்கின்ற போது, உலகப் பொருளாதாரத்தில் காணப்படும் உறுதியற்றத்தன்மையிலிருந்து உள்நாட்டு பொருளாதாரம் பாதுகாக்கப்படும். இதற்கு மேலதிகமாக, அரசாங்கம் அதன் சுய உள்நாட்டு பொருளாதாரக் கொள்கைகளைத் தெரிவுசெய்வதற்கான சுதந்திரத்தை இது வழங்குகிறது.

எவ்வாறெனினும், இம்முறைமை ஒவ்வொன்றிலும் உள்ளார்ந்த பல பிரதிகூலங்கள் காணப்படுகின்றன. நிலையான செலாவணி வீதத்தை முகாமைத்துவம் செய்வதற்கு போதியளவான வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் தேவைப்படுவதால் நிலையான செலாவணி வீதத்தைப் பேணுவது செலவுமிக்கதாக காணப்படுகிறது. மேலும், ஊகங்களுக்கு அதிகளவிலான சாத்தியப்பாடு இருக்கும் என்பதுடன் பெரும்பாலும் செலாவணி வீதங்களில் செயற்கையான இயக்கங்கள் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையை உருவாக்கலாம். நிலையான செலாவணி வீத முறைமையில், மத்திய வங்கியிடம் போதியளவான வெளிநாட்டு நாணய ஒதுக்குகள் காணப்படாதபட்சத்தில், அது வட்டி வீதங்களை உயர்த்த வேண்டும். இது பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுக்கும். மேலும், நிலையான செலாவணி வீதமானது நாட்டினுடைய உண்மையான பொருளாதார நிலைமையையும் பேரண்டப் பொருளாதார அடிப்படைகளையும் பிரதிபலிப்பதில்லை. மறுகரத்தில், உயர் தளம்பலில் ஈடுபடுகின்ற மிதக்கும் செலாவணி வீதமானது செலவுகளையும் ஆதாயங்களையும் மதிப்பிடுவதற்கு நிதியியல் சந்தைகளுக்கு கடினத்தை ஏற்படுத்துகின்றது. இதனால் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வைக் கணிப்பதற்கும் காப்பிடுவதற்கும் குறிப்பிடத்தக்க மூலங்கள் தேவைப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, நாடு பொருளாதார பிரச்சனைகளை எதிர்காள்கின்ற போது, செலாவணி வீதத்தில் ஏற்படும் உயர் தளம்பல் காரணமாக நிலைமை மோசமடையலாம். இது இறக்குமதிகளை அதிக செலவுமிக்கதாகவும் ஏற்றுமதிகளின் குறைந்தளவான ஈர்ப்பையும் முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழப்பையும் ஏற்படுத்தலாம் என்பதுடன் நாட்டினுடைய பணவீக்கத்திலும் அதேபோன்று பேரண்டப் பொருளாதார மாறிகள் மீதும் தாக்கம்செலுத்தலாம்.

ஒட்டுமொத்தமாக, நிலையான செலாவணி வீதம் அதிகளவிலான உறுதிப்பாட்டை உருவாக்குவதை நிரூபித்துள்ள அதேவேளை மிதக்கும் செலாவணி வீதம் நாணயத்தின் பெறுமதியை நிர்ணயிப்பதிலும் அதேபோன்று பன்னாட்டுச் சந்தையில் சமநிலையை உருவாக்குவதிலும் அதிக வினைத்திறன் மிக்கது.

## இலங்கையில் செலாவணி வீத முறைமைகளின் பரிணாமம்

1950இல் இலங்கை மத்திய வங்கி தாபிக்கப்பட்டதிலிருந்து, உலகிலுள்ள ஏனைய பல நாடுகளைப் போன்று, இலங்கையும் நிலையான செலாவணி வீத முறைமையைப் பின்பற்றியது. இம்முறைமையானது 1977 நவெம்பரில் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்ட வரை, கண்டிப்பான செலாவணி கட்டுப்பாட்டு வழிமுறைகளுடன் பேணப்பட்டது. இக்காலப்பகுதியில், நாட்டினுடைய வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் குறைப்பு மற்றும் ஐ.இ.ஸ்ரேலிங் பவுனின் நிலையான செலாவணி வீதத்தின் தொடர்ச்சியான பெறுமதி குறைப்பு என்பன காரணமாக 1967இல் 20 சதவீதத்தினால் இலங்கை ரூபாவின் பெறுமதி குறைக்கப்பட்டது. இவ்வளர்ச்சியுடன், இலங்கை ரூபாவின் பெறுமதியைப் பாதுகாக்கும் பொருட்டு, 1968இல் இரட்டை செலாவணி வீதங்கள் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறைமையானது "வெளிநாட்டுச் செலாவணி உரித்து சான்றிதழ்கள் திட்டம்" என அறியப்பட்டதுடன் இம்முறைமையின் கீழ், அத்தியாவசிய இறக்குமதிகளும் வழக்கமான ஏற்றுமதிகளும் அலுவல்சார் செலாவணி வீதத்தில் விலை நிர்ணயம்செய்யப்பட்ட அதேவேளை, ஏனைய இறக்குமதிகளுக்கும் ஏற்றுமதிகளுக்கும் வேறொரு உயர் செலாவணி வீதம் பிரயோகிக்கப்பட்டது.

1976 மேயில், பொருத்தமான நிறையேற்றப்பட்ட நாணயங்களின் கூடையைப் பயன்படுத்தி செலாவணி வீதத்தை நிர்ணயிப்பதன் மூலம், இலங்கை ரூபாய் தனியொரு நிலையான நாணய (ஐ.இ.ஸ்ரேலிங் பவுன்) கூடை நிர்ணயத்திற்கு மாற்றமடைந்தது. இலங்கை பொருளாதாரத்தின் அடிப்படைப் போக்குகளின் விளைவுகளை உயர்ந்தளவில் பிரதிபலிப்பதற்கு இது துணைபுரிந்து இம்முறைமை 1977 நவெம்பர் நடுப்பகுதி வரை க்ரௌளிங் பெக் முறைமையின கீழ் படிப்படியாக மீண்டும் சீராக்கப்பட்டது.

1977 நவெம்பரில், ஒருங்கிணைந்த செலாவணி வீதத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் இலங்கை கட்டுப்படுத்தப்பட்ட செலாவணி வீதக் கொள்கைகளிலிருந்து வெளிநாட்டு வர்த்தகத்தினதும் கொடுப்பனவினதும் பகுதியளவான தாராளமயமாக்கலை நோக்கிய முக்கிய நகர்வொன்றை மேற்கொண்டது. ஒருங்கிணைந்த செலாவணி வீத முறைமையின் கீழ், செலாவணி வீதம் மிதப்பதற்கு அனுமதிக்கப்பட்டு சந்தையில் காணப்படுகின்ற கேள்வியையும் நிரம்பலையும் அடிப்படையாகக் கொண்டு பாரியளவில் நிர்ணயிக்கப்படும். இருப்பினும், நாட்டிலுள்ள மிகக்குறுகிய வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை கருத்திற்கொண்டும், நிதியியல் முறைமை சுயமாகத் தொழிற்படுவதற்கு போதியளவான முதிர்ச்சி காணப்படவில்லை என்பவற்றைக் கருதி, செலாவணி வீத முறைமையைத் தொடர்ந்து முகாமைசெய்வதற்கு இலங்கை மத்திய வங்கியை அனுமதிப்பது உகந்ததாகக் கருதப்பட்டது. இதற்கமைவாக, இலங்கை மத்திய வங்கியானது சந்தைக்கு நாளாந்த அடிப்படையில் செலாவணி வீதங்களை வாங்குவதையும் விற்பதையும் அறிவித்து அது தொழிற்பட வேண்டிய குறுகிய எல்லையை குறித்துரைத்தது. இம்முறைமைகள் "முகாமை செய்யப்பட்ட மெதுவடையும்/ மிதக்கும் செலாவணி வீத முறைமை" என அழைக்கப்படுகின்றன. 1977இல் பொருளாதாரம் திறந்துவிடப்பட்டதுடன், இறக்குமதி கேள்வியில் நிலையான அதிகரிப்பு, எண்ணெய் இறக்குமதி விலைகள் அதிகரிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான செலவினங்களின் காரணமாக மேலதிக இறக்குமதிகள் உள்ளடங்கலாக பல சந்தை அபிவிருத்திகள் ஏற்பட்டன. இவை அனைத்தும் சென்மதி நிலுவையில் அதிகரிப்பை தோற்றுவித்து நாட்டினுடைய வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை வெளியேற்றுவதற்கு தூண்டியது. மேலும், 2000ஆம் ஆண்டில் இடம்பெற்ற போர் சூழ்நிலை காரணமாக நாட்டின் சிவில் அந்தஸ்தில் ஏற்பட்ட மோசமான விளைவுகளுடன், அரசாங்க செலவினமும் அதிகரித்தது. இலங்கை ரூபாவின் அதிகரித்த தேய்மானத்திற்கு ஆதரவான சந்தை எதிர்பார்க்கைகளின் அடிப்படையில், ஏற்றுமதியாளர்கள் தமது வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை வைத்திருந்து ரூபாய் நிதியங்களினூடாக உள்நாட்டுத் தொழிற்பாடுகளுக்கு நிதியளித்த அதேவேளை இறக்குமதியாளர்கள் தமது தொழிற்பாடுகளை முன்னேற்றி இறக்குமதிகளுக்காக முன்கூட்டிய நடவடிக்கையை முன்னெடுத்தனர். செலாவணி வீதத்தில் கணிசமான அழுத்தத்தை முகாமைசெய்வதற்கு, இலங்கை மத்திய வங்கியானது படிப்படியாக வாங்கல் மற்றும் விற்றல் எல்லைகளை பல தடவைகள் திருத்தியமைத்த அதேவேளை செலாவணி வீதத்தை முகாமைசெய்வதற்கு கணிசமானளவு ஐக்கிய அமெரிக்க டொலர்களை சந்தைக்கு வழங்கியது. இதன் காரணமாக, விரும்பத்தக்க எல்லைகளுக்குள், முகாமைசெய்யப்பட்ட மிதக்கும் செலாவணி வீதத்தைப் பேணுவதற்கு, இலங்கை மத்திய வங்கி கணிசமானளவு செலாவணி ஒதுக்குகளை விற்பனை செய்ய வேண்டியிருந்தமையால், இலங்கை அதன் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளில் வீழ்ச்சியை அனுபவித்தது. 1977 நவெம்பர் தொடக்கம் 2001 சனவரி வரை, ஐ.அ.டொலருடன் தொடர்புடைய செலாவணி வீதம் 1977இல் ரூ.15.56 இலிருந்து 2000 ஆண்டிறுதியில் ரூ.80.6 ஆக படிப்படியாகத் திருத்தப்பட்டது.

இவ்வளர்ச்சிகளுடன், 2001 சனவரி 23 தொடக்கம், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் செலாவணி வீதத்தை நிர்ணயிப்பதற்கு வெளிநாட்டுச்

செலாவணியின் நிரம்பலினதும் கேள்வியினதும் சந்தைச் சக்திகளை அனுமதிப்பதன் மூலம், இலங்கை நிலையான செலாவணி வீத முறைமையொன்றைப் பேணியது. செலாவணி வீதத்தில் குறிப்பிடத்தக்க தளம்பலை இலங்கை மத்திய வங்கி அவதானிக்கும் போது செலாவணி வீத உறுதிப்பாட்டைப் பேணுவதற்கு மாத்திரம் அதன் தலையீடு மட்டுப்படுத்தப்பட்டது.

கடந்த அண்மைக் காலங்களில், செலாவணி வீதத்தில் குறிப்பிடத்தக்க தளம்பலை இலங்கை மத்திய வங்கி அவதானித்ததற்கான பல்வேறு சந்தர்ப்பங்கள் காணப்பட்டன, அதற்கமைவாக, தளம்பலை முகாமைசெய்யும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி அதன் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் பகுதியை காலத்திற்கு காலம் வழங்கியது. அதேபோன்று, சந்தை சாதகமானதாக இருக்கும்போது, இலங்கை மத்திய வங்கி அதன் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கை அதிகரிப்பதற்காக சந்தையிலிருந்த ஐக்கிய அமெரிக்க டொலர்களை கொள்வனவு செய்தது. மேலும், நிலவுகின்ற நெருக்கடியான சூழ்நிலையில் “இலங்கையில் அண்மைய செலாவணி வீதப் போக்கு” என்ற பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் செலாவணி வீத முகாமைத்துவத்தில் மேலும் அபிவிருத்திகள் விளக்கப்பட்டுள்ளன.


ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா செலாவணி வீதப் போக்கு பற்றிய வரைபட விளக்கம் கீழே வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளது:

### செலாவணி வீதத்தை நிர்ணயிக்கும் காரணிகள்

பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்கள் போன்ற மாறிகளைத் தவிர, நாணய செலாவணி வீதம் நாட்டினுடைய பொருளாதார உறுதிப்பாட்டினதும் பொருளாதார ஆரோக்கியத்தினதும் மிக முக்கியமான கூறுகளில் ஒன்றாகும். மேலும், இது நாட்டின் பன்னாட்டு பின்னணிக்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆகையால், ஏனைய காரணிகளுக்கிடையில், செலாவணி வீதங்கள் அநேகமாக பகுப்பாய்வு செய்யப்படுவதும் ஆய்வு செய்யப்படுவதும் அவதானிக்கப்படுவதும் அரசியல் ரீதியாக செல்வாக்கை செலுத்தியதுமான பொருளாதார வழிமுறைகளாகும். இந்நோக்கில், செலாவணி வீதத்தின் அசைவுகளுக்குப் பின்னணியிலிருக்கும் சில முக்கிய காரணிகளை அறிந்துகொள்வது பயனுள்ளதாகும்.

#### (i) வட்டி வீத வேறுபாடுகள்

ஒரு நாட்டின் வட்டி வீதங்கள், பணவீக்கம் மற்றும் செலாவணி வீதங்கள் போன்ற காரணிகள் அதிகம் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டவையாகவும் மிகவும் நெருக்கமானவையாகவும் விளங்குகின்றன. வட்டி வீதங்களை சீராக்குவதன் மூலம், நாட்டின் பணவீக்கம் அதேபோன்று செலாவணி வீதம் என்பவற்றில் மத்திய வங்கிகள் செல்வாக்குச் செலுத்தலாம். நாட்டினுடைய உயர்வான வட்டி வீதங்கள் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது கடன் வழங்குபவர்களுக்கு/ முதலீட்டாளர்களுக்கு உயர் வருவாயை வழங்கி வெளிநாட்டு மூலதனத்தினை ஈர்ப்பதற்கு தூண்டலாம்.



பொதுவாக, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெரும்பாலும் அதிக வட்டி வீதங்களைக் கொண்ட நாடுகளுக்கு நிதியங்களைப் பாய்ச்சுகின்றனர். இது குறுகிய காலத்தில் இலாபமீட்டுவதற்கான பணப் பாய்ச்சல்கள் (hot money flows) என்று அழைக்கப்படுகின்றது. இது செலாவணி வீதத்தில் உயர்வொன்றுக்கு வழிவகுக்கிறது. இருப்பினும், வேறு காரணங்கள் அதேபோன்று நாட்டிற்கான கொடுகடன் தரமிடலின் நிலை, வெளிநாட்டு நாணயப் படுகடன் பொறுப்புக்கள், வியாபாரம் செய்தல் சுட்டெண்ணின் நிலை, அரசியல் உறுதிப்பாடு, நிதியியல் உளவறிதல்/ உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் இணங்குவித்தல் போன்றவற்றின் தாக்கத்திற்குட்பட்டதாகும். வேறு அனைத்தும் சமமானதாக இருக்கையில், பெரும்பாலான வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உயர் வட்டி வீதத்தில் முதலிடுவதற்கு முற்படுகின்றமையினால், இதன்மூலம் வெளிநாட்டு மூலதனத்தை உள்நாட்டு நாணயத்தில் முதலீடு செய்யப்படுவதனால் நாட்டினுடைய உயர் வட்டி வீதமானது உள்நாட்டு நாணயத்திற்கான கேள்வியை அதிகரிக்கும். இருப்பினும், நடைமுறையில் இது பணவீக்க அழுத்தங்களினால் சமநிலைப்படுத்தப்படுகிறது.

### (ii) பணவீக்க வேறுபாடுகள்

பொதுவாக, தொடர்ச்சியாக குறைந்த பணவீக்க வீதத்தைக் கொண்ட ஒரு நாடு நாணயப் பெறுமதியில் உயர்வொன்றைக் காட்டுகிறது. இதன் காரணமாக, ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும் போது அந்நாணயங்களின் கொள்வனவு திறன் உயர்வானதாகும். குறைந்த பணவீக்கத்தின் மூலம் பொருட்கள்/ பணிகள் பெரும் போட்டித்தன்மை மிக்கதாகக் காணப்பட்டு அப்பொருட்களுக்கான/ பணிகளுக்கான கேள்வி பொதுவாக உயர்வடையும். வேறு அனைத்தும் சமமானதாக இருக்கையில், உயர்வான பணவீக்கமானது உள்நாட்டு நாணயத்திற்கான கேள்வியை குறைத்து உள்நாட்டு நாணயப் பெறுமதியை தேய்வடையச் செய்ய முனையும்.

### (iii) பொதுப் படுகடன்

அரசாங்கங்கள் பல்வேறு காரணங்களுக்காக பல வழிகளைப் பயன்படுத்தி படுகடனை திரட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, சொந்த நாணயம் அதேபோன்று வெளிநாட்டு நாணயம் ஆகிய இரு நியதிகளிலும், பெருமளவிலான படுகடன்களை திரட்டுவதன் வாயிலாக சில அரசாங்கங்கள் பாரியளவிலான பெறுமதியைக் கொண்ட பொதுத் துறை செயற்றிட்டங்களில் ஈடுபடுகின்றன. அச்செயற்றிட்டங்கள் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளை தூண்டுகின்ற போதிலும், பெருமளவிலான பொதுப் படுகடன்களுடன் கூடிய நாடுகள், வெளிநாட்டு முதலீட்டாளர்களை குறைந்தளவிலேயே ஈர்க்கின்றன. ஒரு நாடு அதன் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுகின்ற இடர்நேர்வுகள் காணப்படுகின்றன என்று வெளிநாட்டவர்கள் நம்புவார்களாயின், அவ்வாறான சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு கவலையளிக்கக்கூடியதாக அமையலாம். மேலும், தவணைதவறுதல் இடர்நேர்வுகள் அதிகளவில் காணப்படுமாயின், வெளிநாட்டவர்கள் அந்நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்களை கொள்வனவு செய்வதற்கு தயங்குவர். இக்காரணத்திற்காக, நாட்டினுடைய படுகடனானது அதன் செலாவணி வீதத்தை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக அமைகின்றது. ஆகையால், நம்பகமானதொரு மீள்கொடுப்பனவு திட்டமின்றி நாடு கணிசமானளவு தேசிய படுகடனைக் கொண்டிருக்குமாயின், அது நாணயப் பெறுமதியை எதிர்மறையாகப் பாதிக்கலாம்.

### (iv) நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகள்

ஒரு நாட்டின் நடைமுறைக் கணக்கானது வர்த்தக நிலுவையுடன் சேர்த்து தேறிய வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தையும் நேரடி கொடுப்பனவுகளையும் சுருக்கமாக குறிப்பிடுகிறது. வர்த்தக நிலுவை என்பது நாட்டினுடைய பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகளுக்கும் ஏற்றுமதிகளுக்குமிடையிலான வேறுபாடாகும். நடைமுறைக் கணக்கில் பற்றாக்குறையொன்று காணப்படுமாயின், ஒரு நாடு வருவாய் ஈட்டுவதை விடவும் வெளிநாட்டு வர்த்தகத்திற்கும் வெளிநாட்டு கொடுப்பனவிற்கும் அதிகளவில் செலவிடுகின்றது என்று கருதப்படுவதுடன், பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து மூலதனக் கடன்பெறுதலை வேண்டுகிறது. வேறு வார்த்தையில் குறிப்பிடுவதாயின், ஏற்றுமதிகள் மற்றும் ஏனைய வழிகளின் மூலமாக நாட்டிற்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நாணயத்தை விடவும் அதிகமாக அவற்றை வேண்டிநிற்கின்றது. வெளிநாட்டு நாணயத்திற்கான மிகையான கேள்வியானது செலாவணி வீதத் தேய்மானத்திற்கு வழிவகுக்கிறது.

### (v) நாணயக் கொள்கையும் பொருளாதாரச் செயலாற்றமும்

நாடு திடமான பொருளாதாரச் செயலாற்றத்தையும் ஆற்றல்வாய்ந்த நாணயக் கொள்கையையும் பேணியிருக்குமாயின், வெளிநாட்டு முதலீட்டாளர்களும் வெளிநாட்டு இணைத்தரப்பினர்களும் முதலீடுகளை மேற்கொள்வதற்கு அதிகப்படியான ஈடுபாட்டை கொண்டிருப்பர். அத்தகைய சார்பு ரீதியான பொருளாதார அடிப்படைகளைக் கொண்ட ஒரு நாடு, அதிக வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும், இதன் விளைவாக உள்நாட்டு நாணயப் பெறுமதி உயர்வடையும். மறுபுறத்தில், எடுத்துக்காட்டாக, நாட்டிலிருந்து வெளியேறி அரசியல் உறுதிப்பாடின்மை, நாணயத்தின் மீதான நம்பிக்கையை இழக்கச்செய்து நிதியங்கள் உள்நாட்டு நாணயத்தில் தேய்மானத்தை ஏற்படுத்தும்.

**(vi) வர்த்தக மாற்று விகிதம்**

ஒரு நாட்டினுடைய ஏற்றுமதிகளின் விலை, இறக்குமதிகளின் விலையை விடவும் பெருமளவில் அதிகரிக்கும் போது, அது வர்த்தக மாற்று விகிதத்தில் சாதகமான முன்னேற்றமாக கருதப்படலாம். வர்த்தக மாற்று விகிதம் மேம்படுத்துகின்றபோது, அது ஏற்றுமதிகளுக்கான கேள்வியில் அதிகரிப்பிற்கு உதவி இதன்பயனாக நாணயத்தின் பெறுமதியை உயர்த்துகிறது.

**(vii) அரசியல் உறுதிப்பாடு**

நாடு அரசியல் உறுதிப்பாடின்மையை அனுபவிக்கின்ற போது, முதலீட்டாளரின் நம்பிக்கை இழந்து வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பது குறைவடைகிறது. இது நாணயத்தின் உள்நாட்டு பெறுமதியிலும் செலாவணி வீதத்திலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். முதலீட்டாளர்களுடைய முதலீடுகளின் பாதுகாப்பு, சட்ட கட்டமைப்பின் வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயமான மற்றும் ஒழுங்கான சந்தை நடைமுறைகள் என்பனவற்றில் காணப்படுகின்ற நிச்சயமற்ற தன்மை காரணமாக அரசியல் உறுதிப்பாடின்மை முதலீட்டாளர்களுக்கு கரிசனைகளைத் தோற்றுவிக்கிறது.

**(viii) ஊகம்**

பல காரணங்களினால் அதாவது தரப்படுத்தல் நடவடிக்கைகள், அரசாங்க கொள்கைகளில் மாற்றம், குறிப்பிடத்தக்க வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள்/ வெளிப்பாய்ச்சல்கள் பற்றிய எதிர்ப்பார்கைகள் உள்ளடங்கலாக ஒரு நாட்டின் நாணயம் ஏதேனும் காரணத்திற்காக உயர்வடைவதற்கு/ தேய்வடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற போது, சந்தைப் பங்கேற்பாளர்களினால் ஊகம் தோற்றுவிக்கப்பட்டு நாணயப் பெறுமதியில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

**(ix) விசேட கருதல்கள்**

மேற்குறித்தவற்றுக்கு மேலதிகமாக, உள்நாட்டு நாணயங்களின் பெறுமதி மீதான தாக்கத்தைக் கொண்டுள்ள ஏனைய சில கருதல்களும் காணப்படுகின்றன. உதாரணமாக ஒட்டுமொத்த பொருளாதார நிலைப்பாடும் நிச்சயமற்று இருக்கும் போது, உறுதியானதாகவிருக்கக்கூடியதும் வெளிநாட்டு மூலதனத்தை கவரக்கூடியதுமாக பல்வேறு நாணயங்கள் “பெறுமதியை தக்கவைக்கின்றவையாகக் (safe-haven)” கருதப்படுகின்றன. ஐ.அ.டொலர், யப்பான் யென், யூரோ போன்றன பெறுமதியை தக்கவைக்கின்ற அவ்வாறான நாணயங்களில் உள்ளடக்கப்படுகின்றன. மேலும், ஐக்கிய அமெரிக்க டொலரானது உலகளாவிய ஒதுக்கு நாணயமாகக் கருதப்பட்டு ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலருக்கான கேள்வி அதிகரிப்பை ஏற்படுத்துகின்றது.

**இலங்கையில் காணப்படுகின்ற அண்மைய செலாவணி வீதப் போக்கு**

ஏற்கனவே குறிப்பிடப்பட்டத்தற்கமைவாக, அண்மைக் காலங்களில் அதிகளவில் கலந்துரையாடப்படும் விடயங்களில் ஒன்றாக செலாவணி வீதம் விளங்குகிறது. ஆகையால், நாட்டின் செலாவணி வீதத்திற்காக மிகவும் பொதுவாக பெருமளவில் பயன்படுத்தப்படும் குறிகாட்டிகள் எவை என்பதை அறிந்துகொள்வது அவசியமாகும்.

இலங்கையில், நாட்டினுடைய செலாவணி வீதத்தை வெளியிடுவதற்கான அதிகாரத்தைக் கொண்ட நிறுவனமாக இலங்கை மத்திய வங்கி காணப்படுகின்றது. இதற்கமைவாக, “ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா உடன் செலாவணி வீதத்தின் நடு வீதம்” என்று தற்போது (2022.05.13 தொடக்கம்) குறிப்பிடப்படும் ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா உடன் செலாவணி வீதக் குறிகாட்டியும் வாங்கும் மற்றும் விற்கும் தந்திமாற்றல் செலாவணி வீதங்களும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் இரு முக்கிய செலாவணி வீதக் குறிகாட்டிகளாகும். ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா உடன் செலாவணி வீதத்தின் நடு வீதம் என்பது முந்திய/ பிந்திய கிடைக்கப்பெறுகின்ற தொழில் நாள் முழுவதும் உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் செய்யப்படுகின்ற அனைத்து உண்மையான ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா உடன் கொடுக்கல்வாங்கல்களின் நிறையேற்றப்பட்ட சராசரி வீதமாகும். நேரடி வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல் அதேபோன்று இலங்கை மத்திய வங்கியின் குறிக்கப்பட்ட உடன் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பரப் பரிமாற்றல் ஒப்பந்த அடிப்படையிலமைந்த கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய உடனடி வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்கள் ஆகிய இரண்டையும் இது உள்ளடக்குகிறது. வாங்கும் மற்றும் விற்கும் தந்திமாற்றல் செலாவணி வீதங்கள் என்பது தெரிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் இலங்கை மத்திய வங்கிக்கு தந்திமாற்றல்களுக்காக நாளாந்த அடிப்படையில் மு.ப 9.30 மணிக்கு வழங்கப்படும் கோரல்களின் சராசரியைக் குறிப்பிடுகின்றது. இருப்பினும், நாளின்போது செலாவணி வீதத்தின் ஒரு நாளுக்குள்ளேயான அசைவுகளை அடிப்படையாகக் கொண்டு வங்கிக்கு வங்கி மாற்றமடையலாம். பொதுவாக, ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா உடன் செலாவணி வீதத்தின் நடு வீதம், உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கிடையில்

பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை தந்திமாற்றல் வாங்கும் மற்றும் விற்கும் செலாவணி வீதங்கள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கிடையில் அத்துடன் ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள், கூட்டுநிறுவனங்கள், முதலீட்டாளர்கள், மற்றும் ஒட்டுமொத்த பொதுமக்கள் மத்தியில் கொடுக்கல்வாங்கல்களில் பயன்படுத்தப்படுகின்றன.

2020 சனவரி தொடக்கம் 2022 செத்தெம்பர் நடுப்பகுதி வரை, இவ்விரு குறிகாட்டிகளையும் பகுப்பாய்வு செய்யும் போது, இக்காலப்பகுதியில் ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா செலாவணி வீதமானது ஒட்டுமொத்த அடிப்படையில் தேய்வடைந்துள்ளது என்பது தெளிவாகிறது.

ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா உடன் செலாவணி வீதத்தின் நடு வீதமானது ஐ.அ.டொலருக்கெதிராக 2019.12.31இல் உள்ளவாறு ரூ.181.63 இலிருந்து 2020.12.31இல் உள்ளவாறு ரூ.186.41 இற்கு 2.6 சதவீதத்தினால் தேய்வடைந்தது. எனினும், ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா உடன் செலாவணி வீதமானது 2022.09.15 வரை ரூ.185.39 இலிருந்து ரூ.362.45 இற்கு ஏறத்தாழ 96 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க தேய்மானத்துடன் 2021.01.01 தொடக்கம் 2022.09.15 வரை அதேபோக்கில் சென்றது. தந்திமாற்றல் வாங்கும் மற்றும் விற்கும் செலாவணி வீதங்கள் தொடர்பில், அதேபோன்ற போக்கு தொடர்ந்ததுடன் தந்திமாற்றல் விற்பனை செய்யும் வீதங்கள் 2019.12.31இல் ரூ.183.33ஆகப் பதிவுசெய்யப்பட்டு 2022.09.15 அன்று ரூ.369.71இற்கு தேய்வடைந்தது. சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள், தொடர்ச்சியான நாட்டிற்கான கொடுகடன் தரப்படுத்தல் தரமிறக்கல்கள், நாட்டின் அரசியல் உறுதிப்பாடின்மை, என்பனவற்றில் கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்தி உரிய காலத்தில் கடன் தீர்ப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின்/ அரசாங்கத்தின் மீள்கொடுப்பனவு இயலளவிற்கு அப்பாற்பட்டவையாக காணப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகளின் குறிப்பிடத்தக்க அளவு போன்ற கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலினால் ஏற்பட்ட தாக்கம் செலாவணி வீதம் குறிப்பிடத்தக்களவில் தேய்வடைவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளுக்கமைவாக, வருடாந்த சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய வருவாய்கள் 2019இல் ஏறத்தாழ 3,607 மில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டிருந்து 2021இல் ஐ.அ.டொலர் 507 மில்லியனிற்கு குறைவடைந்தன *(இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2021)*. உலக கடன் தரப்படுத்தல் முகவராண்மைகளினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான நாட்டிற்கான கொடுகடன் தரப்படுத்தல் தரமிறக்கல்களைப் பொறுத்தமட்டில், 2020 செத்தெம்பரில், மூடிஸ் இன்வெஸ்டர்ஸ் சேர்விஸ் (மூடிஸ்), இலங்கையின் நீண்ட கால வெளிநாட்டு நாணய வழங்குநர் மற்றும் முந்நிகழ்வு பிணையளிக்கப்படாத தரப்படுத்தல்களை B2 இலிருந்து Caa1 ஆக தரம்குறைத்து தோற்றப்பாட்டை நிலையானதாக மாற்றியது. மேலும் 2020 நவெம்பரில், குறிப்பாக பிட்ச் ரேட்டிங் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான நாட்டிற்கான படுகடன் விகிதத்தில் ஏற்பட்ட உயர்வை அடிப்படையாகக் கொண்டும், படுகடன் நிலைபெறத்தக்க இடர்நேர்வை கருத்திற்கொண்டு, இலங்கையின் நீண்ட கால வெளிநாட்டு நாணய வழங்குநர் தவணைதவறும் தரப்படுதலை B- இலிருந்து CCC ஆகத் தரம் குறைத்தது. மேலும், 2020 திசெம்பரில், ஸ்டான்ட் அன்ட் புவர் நிறுவனம், இலங்கை கொடுகடன் தரப்படுத்தலை B இலிருந்து CCC+ இற்கு தரம் குறைத்தது. மேலும், 2022 ஏப்பிறலில் அறிவிக்கப்பட்ட அரசாங்கத்தின் படுகடன் செயலாற்றமற்ற ஏற்பாட்டுடன், பிட்ச் ரேட்டிங் 2022 மேயில், இலங்கையின் நீண்ட கால வெளிநாட்டு நாணய வழங்குநர் செலுத்தத்தவறும் தரப்படுத்தலை "RD" ஆக (மட்டுப்படுத்தப்பட்ட தவணைதவறுதல்) தரம்குறைத்துள்ளதுடன் 2022 ஏப்பிறலில், ஸ்டான்ட் அன்ட் புவர் நிறுவனம், நீண்ட கால வெளிநாட்டு நாணய நாட்டிற்கான கொடுகடன் தரப்படுத்தலை "SD" ஆக (தெரிவுசெய்யப்பட்ட தவணைதவறுதல்) குறைத்தது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை நிலையிலும் நாட்டினுடைய செலாவணி வீதத்திலும் உலகத் தரப்படுத்தல் முகவராண்மைகளினால் மேற்கொள்ளப்பட்ட இத்தரப்படுத்தலின் நடவடிக்கைகள் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தின. முதலீட்டாளர் நம்பிக்கையை இது பாரியளவில் பாதித்து கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலும் அரசாங்கப் பிணையச் சந்தைகளிலும் இருந்த தமது வெளிநாட்டு உடமைகளை அவர்கள் தொடர்ந்து விற்பனை செய்தனர்.

2020 மற்றும் 2021 காலப்பகுதியில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையிலும் அரசாங்கப் பிணையச் சந்தையிலும் இருந்தான மொத்த தேறிய வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்கள் முறையே, ஐ.அ.டொலர் 825 மில்லியனையும் ஐ.அ.டொலர் 290 மில்லியனையும் பதிவுசெய்தன. மேலும், தரப்படுத்தல் தரமிறக்கமானது இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு இணைத்தரப்பு கொடுகடன் வரையறைகளில் நேரடியாகப் பாதிப்பைச் செலுத்தியவுடன், அதற்கமைய உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை நிலையானது குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்பட்டது. செலாவணி வீதத்தில் இவை குறிப்பிடத்தக்க அழுத்தத்தை தோற்றுவித்தன. இதற்கு மேலதிகமாக, அரசியல் உறுதிப்பாடின்மையுடன் இணைந்து நாட்டில் அண்மை காலங்களில் தோற்றுவிக்கப்பட்ட பாதகமான போக்குகள்

முதலீட்டாளர்களுக்கு நிச்சயமற்றத்தன்மையை உருவாக்கி சந்தை பற்றிய நம்பிக்கையை கடுமையாகப் பாதித்தன. இது செலாவணி வீதத்தில் மேலும் தேய்மானத்திற்கு வழிவகுத்தது. எவ்வாறெனினும், இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட சில கொள்கைசார்ந்த தீர்மானங்கள் இக்காலப்பகுதியில் செலாவணி வீதத்திலுள்ள அழுத்தத்தை பெருமளவிற்கு தளர்த்துவதற்கு ஆதரவளித்தன. அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட வெளிமுகப் பணவனுப்பல்கள் மீதான தற்காலிகக் கட்டுப்பாடுகள், உள்முகத் தொழிலாளர் பணவனுப்பல்களை ஊக்குவிப்பதற்கான ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தல், ஏற்றுமதியாளர்கள் நாட்டிற்கு பணத்தை கொண்டுவந்து மாற்றுவதற்கான தேவைப்பாடுகளை விதித்தல், இறக்குமதிக்கு நிதி வழங்குவதற்கு திறந்த கணக்கு கொடுப்பனவு முறைமையை தடைசெய்தல், ஹவாலா, உண்டியல் போன்ற முறைசாரா வழிகளினூடாக வெளிநாட்டுச் செலாவணியில் அனுப்புவதுடன் தொடர்புடைய நடவடிக்கைகளைத் தடைசெய்தல், வங்கித்தொழில் துறைக்கு அழுத்தத்தை ஏற்படுத்தாமல் எரிபொருள், எரிவாயு, நிலக்கரி உள்ளடங்கலாக நாட்டினுடைய பெரும்பான்மையான வலுசக்தியுடன் தொடர்புடைய வெளிநாட்டுச் செலாவணித் தேவைப்பாடுகளுக்கு இலங்கை மத்திய வங்கி நிதியளித்தல் என்பனவற்றை இக்கொள்கை வழிமுறைகள் உள்ளடக்குகின்றன.

மேலும், வங்கிகளின் ஆதரவுடன் இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்கு காலம் சில செலாவணி வீத வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன அத்துடன் அண்மையில், 2022.05.13 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில், செலாவணி வீதத்தில் தேவையற்ற நாளுக்குள்ளேயான தளம்பலைக் குறைக்கும் பொருட்டு, வங்கிகளுக்கான மாறுபாட்டு எல்லையுடன் நடு செலாவணி வீதத்தை நாளாந்த அடிப்படையில் வெளியிடுவதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட்டன.

அண்மைக் காலங்களில், ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா உடன் செலாவணி வீதத்தின் நடு வீதத்தினதும் தந்திமாற்றல் வாங்கும் மற்றும் விற்கும் வீதங்களினதும் போக்கு கீழே அட்டவணை 2இல் காட்டப்பட்டுள்ளது.

**உசாத்துணைகள்**


(i) Annual Report, CBSL, 2000

(ii) Annual Report, CBSL, 2020

(iii) Annual Report, CBSL, 2021


(iv) Annual Report on Exchange Arrangements and Exchange Restrictions 2018, IMF, April - 2019

(v) https://www.cbsl.gov.lk

(vi) https://www.economywatch.com

(vii) https://www.investopedia.com


**வரைபடம் 2: ஐ.அ.டொலர்/ இல. ரூபா செலாவணி வீதப் போக்கு**




# புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களிடம் விடுக்கப்படும் அன்பான வேண்டுகோள்

இலங்கையின் பொருளாதாரத்திற்கு நீங்கள் வழங்கும் பங்களிப்பிற்கு நன்றி தெரிவிக்கின்ற அதேவேளை, நீங்கள் வெளிநாட்டில் உழைக்கும் வருவாய்களை உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு அனுப்புவதற்கு முறையான வழிகளைப் பயன்படுத்தி, எமது நாட்டுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

## நீங்கள் அனுப்பும் பணம் ஏன் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது?

புலம்பெயர்ந்து வாழ்கின்றவர்கள் பணம் அனுப்பும் போது, உலகின் ஏனைய நாடுகளுடனான கொடுக்கல்வாங்கல்களுக்கு நாம் பயன்படுத்துகின்ற வெளிநாட்டு நாணயத்தை அது கணிசமானளவில் எமது நாட்டிற்குக் கொண்டுவருகின்றது. வெளிநாட்டிலிருந்து நிதி கிடைப்பது தடைப்பட்டு, அத்தியாவசியப் பொருட்களுக்கும் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வழிவகுத்துள்ள இத்தருணத்தில் இது மிகவும் முக்கியத்துவம்மிக்கதாகும். **எந்த நோக்கமாகவிருப்பினும் முறையான வழிகள் ஊடாக** நீங்கள் அனுப்பும் பணம் எரிபொருள், எரிவாயு, மருந்து மற்றும் உணவு போன்ற இலங்கையின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு பன்னாட்டு வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை தொடர்ந்தும் நாம் முன்னெடுப்பதற்கு துணையளிக்கும்.




## இலங்கை பொருளாதாரத்திற்கு நன்மை பயக்கும் வகையில் நீங்கள் பணத்தை எவ்வாறு அனுப்ப முடியும்?

அத்தியாவசிய பொருட்கள் மற்றும் மருந்துகளுக்கு தேவையான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவை வசதிப்படுத்துவதற்கு வங்கிகளையும் மத்திய வங்கியையும் இயலச்செய்யும் வகையில், நாட்டிற்கு வெளிநாட்டு செலாவணி கிடைப்பதை உறுதிசெய்வதற்கு நீங்கள் வெளிநாட்டில் உழைக்கும் பெறுமதிமிக்க வருவாய்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு முறையான நிதியனுப்பல் வழிகளைப் பயன்படுத்துங்கள்.

## நீங்கள் வெளிநாட்டில் உழைக்கும் வருவாய்களை பின்வரும் வழிகளில் அனுப்பலாம்:

- உங்களின் வெளிநாட்டு வங்கியிலிருந்து இலங்கையில் உரிமம்பெற்ற வங்கியொன்றிலுள்ள கணக்கிற்கு நேரடியாக அனுப்புதல்
- வெளிநாட்டில் உள்ள முறையான பணப்பரிமாற்றல் நிறுவனங்கள்/ பரிவர்த்தனை நிலையங்கள் ஊடாக இலங்கையில் உரிமம்பெற்ற வங்கியொன்றில் உள்ள கணக்கிற்கு அல்லது பயனாளியொருவருக்கு அனுப்புதல்
- இலங்கையிலுள்ள நிதியியல் நிறுவனங்களுடன் இணைந்த இணையவழி தளங்கள்/செயலிகள் ஊடாக அனுப்புதல்

## நீங்கள் வெளிநாட்டில் உழைக்கும் வருவாய்களை அனுப்பி பின்வருவனவற்றில் முதலீடு செய்யலாம்:

- இலங்கை அபிவிருத்தி முறிகள்
- இலங்கை அரச பிணையங்கள்
- இலங்கை பங்குச் சந்தை
- இலங்கை நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்படும் வைப்பு கணக்குகள்

ஹவாலா மற்றும் உண்டியல் போன்ற முறைசாரா வழிகள் வங்கித்தொழில் வலையமைப்பிற்கு புறம்பாக செயற்படுத்தப்படுவதனால் அத்தகைய வழிகள் மூலம் அனுப்பப்படும் வெளிநாட்டு நாணயங்களை அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்கு பயன்படுத்த முடியாது. இம்முறைசாரா பணப்பரிமாற்றல் முறைகள் நேரடியான வழிகள் ஊடாக மாத்திரமன்றி சில இணையவழி கொடுப்பனவு தளங்களிலும் காணப்படுகின்றன. எனவே, உங்கள் வருவாய்களை முறையான வழிகள் ஊடாக அனுப்புவது நாட்டிற்கு அளவற்ற நன்மை பயக்கும்.

**இலங்கை மத்திய வங்கியிடமிருந்தான செய்தி**

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
☎ 0112477426 0112477710 @ frfd@cbsl.lk